நாடகக் கலை பற்றிய நல்லதொரு கட்டுரை இது. நாடகங்களைப் பற்றி இதைவிடத் தெளிவாகச் சொல்ல முடியாது. சகோதரி இராஜேசுவரியிடம், கொண்ட பொருளைத் தெளிவாக எழுதும் கலை சிறந்து நிற்கிறது!

# நாடும் நாடகமும்

## இராஜேசுவரி நடராஜன், பி. ஏ.

'நாடகமே உலகம்' என்று யார் சொல்லி வைத்தார்களோ, தெரியவில்லை. யார் சொன்னாலென்ன? எவ்வளவு பெரிய உண்மை அது! இந்த உலக அரங்கத்திலேதான் எத்தனை விதமான நாடகங்கள், எத்தனை விதமான பாத்திரங்கள்! இந்த நாடகத்தை எல்லாம் நடத்தி வைக்கும் சூத்திரதாரியான இறைவன் இருக்கிறானே, அவனே தனது அடியார்களை ஆட்கொள்ள என்னென்ன நாடகம் ஆடியிருக்கிறான் என்று எண்ணிப் பார்க்கின்றபோது, இது முதலும் முடிவும் இல்லா நாடகம் என்றுதானே தோன்றுகிறது?

நடிப்பும் கூத்தும் தமிழ் நாட்டின் பழமையான, அருமையான கலைகள். இறைவனையே கூத்தனாக்கி, கூத்தப்பிரானைக வழிபட்டிருக்கிறார்கள் தமிழர். அந்தக் கூத்தைக் காண 'மனிதப் பிறவியும் வேண்டும்'—என்றும் பாடியிருக்கிறார்கள். அப்படிக் கலையைத் தெய்விகமாக்கிப் போற்றிப் புகழ்ந்து, அந்தக் கலை ஆர்வத்திலே, கலை அனுபவத்திலே இறைவனையே கண்டவர்களாயிற்றே நம்மவர்கள்.

நாடகக் கலை ஆய கலைகள் அறுபத்துநான்கிலே ஒன்று என்பது நம் எல்லாருக்கும் தெரியும். தமிழ் மொழி இயல் இசை நாடகம் என்ற முப்பிரிவுகளைக் கொண்டது என்பதும் பள்ளிப் பருவத்திலேயே நாம் அறிந்தது தான். இயற்றமிழும், இசைத் தமிழும், நாடகத் தமிழும் ஒன்றுக்கொன்று இணைந்த நிலையில் மக்கள் வாழ்வை வளம் செய்திருக்கின்றன என்றே சொல்ல வேண்டும். அதன் விளைவாகவே நல்ல பல இலக்கியங்கள் நாட்டில் பிறந்திருக்கின்றன. இளங்கோவடிகள் ஆக்கித் தந்த நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமோ இயல் இசை நாடகம் மூன்றிலும் சிறந்து முத்தமிழ்க் காப்பியம் என்ற பெருமைக்கு உரியதாக விளங்குவதோடு, பண்டைத் தமிழ் நாட்டில் நாடகக் கலை எப்படி மக்களால் போற்றப் பட்டது என்பதற்குச் சான்றும் பகர்கின்றது.

நாடகம் என்பது ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டு, பாட்டு, உரை, நடிப்பு இவற்றின் துணையுடன், நல்ல நீதிகளையும், இலட்சியங்களையும், மக்கள் மனதில் பதிய வைப்பதற்காகப் பல பாத்திரங்களால் நடித்துக் காட்டப்படுவது மக்கள் மனதை நன்னெறிப்படுத்தவும், அறிவாற்றலைப் பெருக்கவும், அவர்களுக்குக்

கலையின்பத்தை வழங்கவும், நாடகம் ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக விளங்கி வந்திருக்கிறது என்றால் அது மிகையே அல்ல. கூத்தும் இசையும் கொழித்த நாட்டிலே, நடிப்பவர் தொகை அருகிவிட்ட காரணத்தாலோ என்னவோ, நாடகக் கலைக்குப் போதிய ஊக்கம் தருபவர் இல்லாமல், இடைக் காலத்தில் நாடகத்தின் வளர்ச்சி குன்றிவிட்டது. இந்தப் பெருங் குறையைப் போக்க அறிஞர்களும கலைஞர்களும் முயன்றிருக்கிறார்கள். பரிதிமாற் கலைஞர் எனப்படும் சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் முதலியோர் முறையே மான விஜயம், மனோன் மணீயம் முதலிய நாடகங்களை ஆக்கி, தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்திருக்கின்றனர்—தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் போன்ற கலைஞர்கள் பற்பல நாடகங்களை உருவாக்கி, அவற்றை மக்களிடையே அரங்கேற்றி, நாடகக் கலை ஒரேயடியாக நசித்து விடாமல், காத்து வளர்த்து வந்திருக்கின்றனர்.

இந்தத் துறையிலே தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகங்கள் அனைத்தும் நடிப்பதற்கென்றே எழுதப்பட்டவை. இதிகாசக் கதைகளை எல்லாம் நாடகங்களாக்கி இசையோடு அரங்கேற்றிய பெருமை அவருக்கே உரியது அவருடைய நாடகங்களிலே, இசையும், தர்க்க வாதங்களுமே தனியாட்சி புரியும். சுவாமிகளது சுலோசனா சதி, அபிமன்யு, சுந்தரி போன்ற நாடகங்களில் இந்த அம்சம் சிறந்து நிற்பதை நாம் உணரலாம். சுவாமிகளது ஆர்வத்தையும் முயற்சியையும் நன்றியோடு நினைவு கூர்ந்து பாராட்டுகின்ற வகையிலேதான் இப்போது அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

சங்கரதாஸ் சுவாமிகளது நாடகங்கள் இன்றைய சமுதாயத்துக்கு ஏற்ற வகையில் அமையாமலிருக்கலாம். இன்று நமது கல்வியறிவு, வாழ்க்கை முறை, கலை நோக்கு எல்லாமே மாறுபட்டிருப்பதால், அவரது நாடகங்களுக்கு 'மவுஸ்' இல்லாமல் போகலாம். ஆனால், அந்த நாளிலே, கல்வியறிவில்லாத பாமர மக்கள்கூட உணர்ச்சி பூர்வமாக இதிகாசக் கதைகளைப் புரிந்து கொள்ளவும், பெரும் உண்மைகளையும் நீதிகளையும் மனதில் கொள்ளவும் சுவாமிகளின் நாடகங்கள் பெரிதும் உதவியிருக்கின்றன என்ற பேருண்மையை நாம் மறுப்பதற்கில்லை; மறப்பதற்குமில்லை. நாடகக் கலையின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்து அவர் ஆற்றிய பணி பெரும்பணி என்றே கொள்ள வேண்டும். அவர் வகுத்துத் தந்த பாதையிலேதான் பிற்காலக் கலைஞர்கள் பல நாடகங்களை அரங்கேற்றி இருக்கிறார்கள். அப்படி அரங்கேற்றி வெற்றிக் கொடி நாட்டியவர்களில் டி. கே. சகோதரர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தங்களது ஒப்பற்ற நடிப்பாற்றலாலும், காட்சி ஜோடனைகளாலும்நாடக உத்திகளாலும் நாடகத் துறையிலே ஒரு புதிய விழிப்பையும் கலகலப்பையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களது சரித்திர, சமூக நாடகங்கள் எல்லாம் பொது மக்களிடையே அமோக ஆதரவைப் பெற்றும் கூட, அவர்களால் அந்தத் துறையிலே நிலையாகத் தொடர்ந்து காலூன்றி நிற்க முடியாமல் போய்விட்டது. இதே நிலைதான் நாட்டில் உள்ள வேறு பல நல்ல நாடகக் கலைஞர்

களுக்கும் ஏற்பட்டுள்ளது!

இன்று நாடகத்தின் இடத்தை சினிமா பிடித்துக்கொண்டு விட்டது. குறைந்த செலவில் நிறைந்த இன்பத்தைப் பெற விரும்புகிற மக்களுக்குச் சினிமாதான் சஞ்சீவியாக இருக்கிறது. நிரந்தரமாக நாடகக் குழுக்களை வைத்துக்கொண்டு நடத்துவதில் பல அசௌகரியங்களும் பொருளாதாரச் சிக்கலும் இருப்பதால், இன்று நாடகக்கலை மேன்மேலும் வளர முடியாமல் தவிக்கிறது. அன்பர் ஒருவர் வேடிக்கையாகக் குறிப்பிட்டார். நாடகத்தை 'வீட்டுச் சாப்பாடு' என்றும், சினிமாவை 'ஹோட்டல் சாப்பாடு' என்றும்! வீட்டுச்சாப்பாட்டிலே உள்ள சுவையும் ஆரோக்கியமும் ஹோட்டல் சாப்பாட்டிலே எதிர்பார்க்க முடியாதுதான் என்றாலும் பலருக்கு ஓட்டல் சாப்பாடுதானே ருசிக்கிறது! நாடகத்திலே நடித்தவர்களெல்லாம் சினிமா உலகத்துக்குத் தாவிவிடவே, நாடகத்தில் நடிப்பவர் தொகையும் குறைந்தே விட்டது. நடிப்பவர் குறையவே, நாடகங்களை எழுதும் பழக்கமுமே குறைந்துவிட்டது!

நாடகங்களில் சில படிப்பதற்கென்றே எழுதப்படுபவை, சில நடிப்பதற்கென்றே எழுதப்படுபவை. படிப்பதற்கும், அதே சமயத்தில் நடிப்பதற்கும் ஏற்ற வகையிலே நாடகங்கள் அமைந்துவிட்டால் அது தனிச் சிறப்புடையதுதான். இன்று வானொலி மூலம் பல நாடக நிகழ்ச்சிகள் ஒலி பரப்பப்படுகின்றன—அவ்வப்போது பத்திரிகைகளிலும் ஓரங்க நாடகங்கள் வெளியாகின்றன. இவற்றில் பெரும்பாலானவை படிப்பதற்கே உகந்தவை. நடிப்பதற்கென்று நாடகங்கள் எழுதப்படுகின்றபோது, தனிப்பட்ட வேறு பல உத்திகளைக் கையாள வேண்டும். பொதுவாக இன்று நாடகம் எழுதுவோர் நம்மிடையே அருகிவிட்டார்கள்

என்றுதான் சொல்ல வேண்டும். நாவல்களும், சிறுகதைகளும் எழுதுகின்ற அளவுக்கு நாடகங்களை எழுத எழுத்தாளர் சமுதாயம் துணிந்து முன்வரவில்லை என்பது கசப்பான உண்மையே!

இருந்தபோதிலும், கலை ஆர்வம் காரணமாகப் பலர் இன்று நாடகங்களை நடத்திக்கொண்டு தானிருக்கிறார்கள். நடிப்பையும், புதிய புதிய உத்திகளையும் பொறுத்தமட்டில் அவைபாராட்டக் கூடியவையாக இருந்தாலும் முன்பு கண்ட நாடகங்களிலுள்ள கலையழகோ இலக்கியத் தரமோ இல்லையென்றே சொல்ல வேண்டும். குறவஞ்சிகளையும், நொண்டி நாடகங்களையும் எளிதில் மறக்க முடியுமா? தற்கால நாடகங்கள், மக்களின் அன்றாடப் பிரச்னைகளை வைத்துக்கொண்டு எழுதப்படும் நையாண்டி நாடகங்களாகவும், மக்களின் பகுத்தறிவுப் பசியைத் தணிக்கின்ற வகையிலே எழுதப் பட்டவைகளாகவுமே அமைந்துள்ளன. இவற்றின் மூலம் நாடகக் கலை மேன்மேலும் செழித்து வளரக்கூடும் என்று நாம் எதிர்பார்பபதில் அர்த்தம் இல்லை.

கலைஅழகும், இலக்கியத்தரமும் வாய்ந்த நாடகங்களே நாட்டிற்குப் பெருமையையும் சிறப்பையும் தேடித் தரக்கூடியவை என்பதை நாம் மறந்துவிடலாகாது. இலக்கியத் தரம்வாய்ந்த ஷேக்ஸ்பியரது நாடகங்களே, ஆங்கில இலக்கியத்திற்கு நிரந்தரமான புகழையும் பெருமையையும் தேடித் தந்துள்ளன என்பதை நாம் மறுக்கமுடியுமா? காளிதாஸனது சாகுந்தலமும் அந்தப் பெருமைக்கு உரியது ஒன்றுதானே?

அத்தகைய நாடகங்கள் வளர வேண்டுமானால், மக்களது கவனத்தை மட்டும் கவர்ந்தால் போதாது. அரசும் தன் பங்கைச் செய்ய முன்வர வேண்டும். சிற்பம், சித்திரம், இசை, நாடகம், நாட்டியம் போன்ற கலைகள் எல்லாம் போற்றிக் காக்கப்பட வேண்டிய கலைகள். ஒருநாட்டின் பண்பை, கலாச்சாரத்தை வளர்க்கக் கூடியன இந்தக் கலைகளே. ஒரு நாட்டின் கலைகளைக் கொண்டே அந்நாட்டின் கலாச்சாரத்தை வெளி நாட்டார் கணிக்க முடியும். இதனால்தான் பண்டைத் தமிழ் நாட்டிலே இந்தக் கலைகளை எல்லாம் அரசனே போற்றிப் பாதுகாத்து, பேணி வளர்த்திருக்கிறான் எனத் தெரிகிறது. அதன் பயனாகவே நாடகம் முதலிய கலைகளும் மிக உயர்ந்த முறையிலே சிறப்புற்று வளர்ந்திருக்கின்றன என்று அறிகிறோம். சிலப்பதிகார காலத்தில் ஆடலரங்குகள் மக்களது கவனத்தை எல்லாம் கவரக்கூடிய பகுதியாகிய ஊரின் நடுவே அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அரங்கங்கள் அமைப்பதோடு மட்டுமின்றி, நாடக நடிகர்களுக்கும் தகுந்த ஊதியத்துக்கு வழி செய்து ஊக்கம் தந்து, ஆதரவு குறைந்துவரும் நாடகக்கலைக்குப் புத்துணர்வு ஊட்டவேண்டிய கடமை நாட்டு மக்களுக்கும், நாட்டை ஆளும் அரசுக்கும் உரியது. அரசு முனைந்து ஆதரவு காட்டமுற்பட்டால் நாடகக்கலை மீண்டும் வளர்ச்சி பெற வழி இருக்கிறது. அந்தப் பொன்னாள் விரைவிலேயே வரும் என்று எதிர்பார்க்கலாம்.

○

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை,
4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17
அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன்,
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81/5 பாண்டிபஜார், தியாகராயநகர், சென்னை-17

# அருள்

மாத இதழ்

விலை 30 காசு

ஆசிரியர்:
திருமதி
தமிழ்வாணன்








தென்னாட்டில் சிறந்த
தெய்விகப் பத்திரிகை


அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
வாத்திய கோஷ்டித்
தலைவர் விரும்புவதும்
காளி மார்க் பானம்தான்.
ஆயிரக் கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாருத ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளி மார்க்
பானங்கள் அருந்துங்கள்.
காளி மார்க்
Kali mark
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.



அர்டிாம சேட

நின் கண்களில் கருணை ஒளிர்கிறது!
நின் இதழ்களில் இசை மிளிர்கிறது!
நின் இதயம் அன்பை வார்க்கிறது!
நின் பெருமை எம்மை ஈர்க்கிறது!

த. பி. சொக்கலால்
ராம் சேட் பாக்டரி பிரைவேட் லிமிடெட்

# அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது

## இந்த இதழில்




| | |
|---|---|
| அருள்—2 | ஜனவரி |
| கருணை—4 | 16—1—68 |
| தை, பிலவங்க | விலை: 30 காசு |

இரா. கோபாலகிருட்டிணன்

**இந்த உலகத்தில் எது உண்மை? இந்த உண்மையைத் தெரிந்து கொண்டவர்களால் மட்டுமே பிறந்ததின் பயனைப் பெற்றுப் பெரு வாழ்வு பெற முடியும்!**



# எது உண்மை?

மனிதன், தான் என்றுமே நிலையானவன் என்னும் எண்ணத்துடனேயே வாழ்க்கை நடத்துகிறான்! தன்மாடு, தன்மனை, சுற்றம், தன் செல்வம் யாவுமே நிலையானவை என்னும் எண்ணம் கொண்டே பொருள் ஈட்டுகிறான்! இது மெய்மையான வாழ்வாகுமா? முழுமையான வாழ்வு என்பது இதுவாகுமா?

இல்லை! மனிதன் எண்ணுகிறானே அந்த எண்ணம், தான் நிலையானவன், தன்மாடு, தன் மனை, தன் சுற்றம், தன் செல்வம் யாவுமே நிலை என்னும் எண்ணம், அது உண்மையாகுமா?

தோன்றும் பொருள் யாவும் அழியும் என்னும் தத்துவத்தை அறியாதவனா மனிதன்? அறிந்தவனே! அறிந்திருந்தும் அவன் மனம் இக்கொகையினை ஏற்பதில்லை! ஏன்? மனப்பக்குவமின்மையே காரணம். பக்குவம் பெற வேண்டும் என்பதே இறைவனின் எண்ணம். இறைவனின் தூதுவர்களாக உலகின் பல்வேறு பாகங்களில் தோன்றும் பெரியோர்களும் இக்கொள்கையினை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். பாரதம் என்னும் இந்நாடு இக்கொள்கையினை உலகுக்குக்குபறை சாற்றிவந்திருக்கிறது. குறிப்பாகத் தமிழகம் இத் தத்துவத்தின் விளை நிலமாக இருந்து வந்துள்ளது.

'புறப்பொருள் வெண்பாமாலை' என்னும் அரிய தமிழ் நூல் பழந் தமிழனின் புறவாழ்வு எங்ஙனம் அமைந்திருந்தது என்பதை நமக்கு விளக்கிக்கூறும் நூல். ஐயனாரிதனார் என்னும் கவிஞன் இந்நூலிலே யாக்கை நிலையற்றது என்பதை இரண்டு வெண்பாக்களில் கூறியுள்ளமுறை நம்மைக் கவரும்.

'ஆயா தறிவயர்ந் தல்லாந்
தகலிடத்து
மாயா நிதியமனைச் செறீஇ-யீயா
திறுகப் பொதியன் மின்றோடு
நாளைக்
குறுக வருமரோ-கூற்று'

மனிதன் ஆராயாமல் உணர்ச்சி மறந்து, அகன்ற பூமியிடத்துக் கெடும் பொருளைத் தன்னுடைய இல்லிலே சேர்க்கிறான். அவற்றை யும் பிறர்க்கு வழங்காமல் சிக் கெனக் கட்டி வைக்கிறான். கட்டி வைக்கும் மனிதன் ஒன்றைமட்டில் மறந்து விடுகிறானே! இன்றாவது, நாளையாவது கூற்றம் தன்னை அணுகவரும் என்பதை மறந்து விடுகிறான்!

இளமை நில்லாதளரா மூப்போடி
றைஞ்சி
யுளமை யுணரா தொடுங்கி-
வளமை
வியப்போவில்லா வியலடித்து
வெஃகா
துயப்போக லெண்ணி னுறும்.

இவ்வுலகில் எது நிலையானது என்பதை ஆராய்ந்தால் இளமை மாறும், முதுமையும் மூப்பும் வந்த டையும், சேர்க்கும் செல்வமும் அழியும், ஆனால் இறப்பு ஒன்றே உறுதியுடைத்து!

இக்கருத்தையே நன்னூல் ஆசிரி யர் பவநந்தி அடிகள் கூறுவார்:

'ஒற்றுமை நயத்தினொன்
றெனத்தோன் றினும்'
வேற்றுமை நயத்தின் வேறே
உடலுயிர்,

உயிரானது தான் அடைந்த உடம்பின் மயமாய் நிற்கிற ஒரு மைப்பாட்டின் தன்மையால்ஒன்று எனத்தோன்றினாலும், வேறுபாட் டின் தன்மையால் அறியுந்தன்மை யுள்ள உயிரும், அறியுந்தன்மை யல்லாத சடமும் வேறாகும்.

ஆகவே, மனிதன் இக்கருத்துக் களை மனதில் பதியவைத்துக் கொண்டு அகவாழ்க்கை புறவாழ்க் கையும் ஒன்றாகும் வாழ்க்கை நெறி யினைக் கடைப்பிடித்தல் அவசியம். இதனையே அவ்வப்பொழுது தோன்றும் மகான்களின் வாழ்வும், வாக்கும் மெய்ப்பித்துவருகின்றன!

திருச்சிற்றம்பலம்

வாழையடி வாழையென
    வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவனன்றோ
    வகையறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குத்
    திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ
    இதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய்
    வள்ளால்யான் உனக்கு
மகன்அலனோ நீஎனக்கு
    வாய்த்த தந்தை அலையோ
கோழையுல குயிர்த்துயரம்
    இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக்
    கொடுத்தருள்இப் போதே.



# துன்பம்

தவப் பெருநிதி
கிருபானந்த
வாரியார்

அன்பர்களே!

துன்பத்தைக் கண்டு அஞ்சாதவனே இன்பத்தை யடைவான். இன்பமாகிய மாளிகைக்குத் துன்பம் ஒரு வாயில் போன்றது. வாயிலில் நுழையாது ஒரு மாளிகைக்குப் போக முடியாது. அதுபோல் துன்பம் எய்தினலொழிய இன்பம் எய்தாது. துன்பம் வருகின்றபோது அதை அஞ்சாது வரவேற்பவனே தீரன்.

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்பதில்'

என்று கூறுகின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவனார்.

நளனும், அரிச்சந்திரனும், இராமரும், பாண்டவர்களும் அளவற்றுத் துன்புற்றதனால், எல்லையில்லாத புகழும் இன்பமும் அடைந்தார்கள்.

இனி தட்டுதல், அராவுதல், வளைத்தல் முதலிய துளபத்தை யடைந்த தங்கம் ஆபரணமாகி அழகு பெறுவதோடு பிறருக்குப் பயன்படுகின்றது. வளைப்பதனால் துன்புற்ற மூங்கில், பல்லக்கில் மன்னனுடைய மணிமகுடத்திற்கு மேல் இருக்கும் மேம்பாட்டை அடைகிறது.

பசி, தாகம், வெயில், மழை இவைகளைப் பொறுத்துத் தவஞ் செய்தவர்கள் அருளைப் பெறுகின்றார்கள். இரவுபகலாக ஓடி உழைத்துத் துன்புற்று விவசாயமும் வியாபாரமும் செய்தவர்கள் பொருளைப் பெறுகின்றார்கள். துன்புறுதலன்றி அருளும் பொருளும் எய்த மாட்டா.

'சுடச்சுடரும் பொன்போல் ஒளி
விடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு'

என்பது பொதுமறை.

துன்பம் மூன்று வகையாக வரும். பாம்பு, தேள், பகைவர் முதலிய உயிர்கள் மூலம் வருவது ஆதியான்மிகம். தண்ணீர், நெருப்பு, இடி, மழை, காற்று குளிர் முதலியவைகளால் வருவது ஆதிதைவிகம். இவ்வாறு வருந் துன்பங்கள் நாம் முற்பிறப்பில் செய்த வினை காரணமாகவே வருகின்றன. அவைகளை நாம் பொறுமையுடன் அநுபவித்தாலொழிய அவை தீர மாட்டா. கருவுற்ற ஒருத்தி துன்புற்று மகவுபெற்றே தீரவேண்டும்

அதுபோல் உடம்பு முகந்து கொண்ட வினைகளைத் துய்த்தே தீரவேண்டும்.

அன்றியும், பிறருக்கு நாம் உதவி புரியவேண்டுமானால் துன்புற்றுத் தானாகவேண்டும். உழுவதனால் துன்புறுகின்ற பூமி பயிரையும் அதன் மூலம் தானியத்தையும் நமக்குத் தருகின்றது. திரி எரிந்து வேதனையுற்று நமக்கு ஒளியைத் தருகின்றது. ஆகவே இன்பம் விழையாது உழைத்துத் துன்பத்தை வரவேற்றுத் தொழில் புரிகின்ற ஒருவன் தன் உறவினருடைய துன்பத்தை நீக்கி உறுதி செய்கின்ற தூண் போன்றவன் ஆவான்.

இன்பம் விழையான் வினைவிழை
வான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்
- திருக்குறள்.

கடவுளை நம்பி நன்னெறியில் நிற்பார் சில சமயம் துன்புறுகின்றார்கள். கடவுள் நம்பிக்கையின்றிப் புன்னெறி நிற்பாரில் பலர் இன்புறுகின்றார்கள். என்ன காரணம்?

காலில் முள் தைக்க வேதனையுறும் புதல்வனுடைய தந்தை பெரிய முள்ளையெடுத்துக் குத்தி மேலும் வேதனை தந்து வேதனையை நீக்குகின்றார். அழுக்குடைய உயர்ந்த ஆடையைக் கல்லில் அடித்துத் துன்புறுத்தி அழுக்கு அகற்றுகின்றனர். சிலந்தி வந்து துன்புறுவாரை வாளால் அறுத்துச் சுட்டு மருத்துவன் அதனை நீக்குவான். அதுபோல் இறைவன் நம்மிடமுள்ள ஆணவமலத்தையகற்றி இன்பத்தைப்பாலிக்கும் பொருட்டு நம்மை நைய வைப்பார். அது கருணையின் விளைவு என்று அறிக.

ஒரு மன்னன் பாக்குவெட்டியால் பாக்கை வெட்டுகின்றபோது அவன் பெருவிரல் அகப்பட்டு வெட்டுப்பட்டது. அவன் துன்புற்றுத் துடித்தான். மதிநலம் படைத்த மந்திரி, ''மன்னரே! இதுவும் ஒரு நன்மைக்குத்தான். எல்லாம் திருவருள்'' என்றான். மன்னனுக்குச் சினம் மூண்டது. ''விரல் போனது நன்மைக்கா? நான் உனக்குச் சிறைத் தண்டனை விதித்துள்ளேன்'' என்றான்! அமைச்சன், ''அதுவும் என் நன்மைக்கே'' என்று கூறிச் சிறை புகுந்தான்.

மறுநாள் மன்னன் வேட்டையாடக்கானகம்போனான். வேடர் வில்லியர்மெய்க்காவலர் அனைவரும் தொடர்ந்து சென்றார்கள். உச்சி நேரத்தில் ஒரு சிங்கம் எதிர்ப்பட்டது. அனைவரும் அஞ்சி ஓடிவிட்டார்கள். மன்னன் சிங்கத்தை எதிர்த்துப்போராடிக் கொன்றான். பின்னர் மன்னன் தனியேசெல்லும்போது மலைவாழ் காடவர் சிலர் பின்புறம் வந்து அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டுபோய்,தாம் புரியும் விழாவில் தமது தேவதையின் முன் நிறுத்திப் பலியிடுவதற்காக வாளை ஓங்கினார்கள். அக்காடவர் தலைவன் இடைமறித்து, ''இவன் விரல் வெட்டுப்பட்டுள்ளது. அங்கம் பழுதானவனை நம் தேவதைக்குப் பலியிடக்கூடாது'' என்று தடுத்து விடுவித்தான். மன்னன் மகிழ்ந்து நகரம் வந்தான். அமைச்சன் அறிவுரையை உன்னி உவந்தான். அவனை அழைத்து நிகழ்ந்ததையுரைத்து, ''இவ்விரல் வெட்டுப்படவில்லையானால் என் தலை போயிருக்கும். என் நன்மைக்கு இது நிகழ்ந்தது; சிறைத் தண்டனையால் உனக்கு என்ன நன்மை விளைந்தது?'' என்று வினவினான்.

''வேந்தே! எல்லாரும் ஓடி ஒளிந்தவாறு சிங்கத்திற்கு முன் நான் ஓடி ஒளியேன். உம்முடன் இருந்து துணை புரிந்திருப்பேன். காடவர்கள் என்னையுங் கட்டிக் கொண்டுபோயிருப்பார்கள். விரல் வெட்டுப்பட்ட உம்மை விடுவித்து விரல் வெட்டுப்படாத என்னைப் பலியிட்டிருப்பார்கள்! அதனால் என் நன்மைக்கேசிறைத்தண்டனை விதிக்கப்பட்டது'' என்றான். மன்னன் கேட்டுத் தெளிவு பெற்றான்.

ஆகவே, உற்ற நோய் நோன்று உயிருக்கு உறுகண் செய்யாது உதவியே புரிந்து உயர்வு பெறுவோமாக.

'இடும்பைக் கிடும்பை படுப்பர்
இடும்பைக்
கிடும்பை படாஅதவர்' - திருக்குறள்



# பாகுபலி பகவான்

ஸ்ரவண பெளிகுளம் என்ற ஊர், நம் நாட்டுப் பண்டை வரலாற்றிலே இடம் பெற்றுள்ள புராதன ஊர். இது மைசூர் ராஜ்யத்தில் இருக்கிறது. நாள்தோறும் நூற்றுக் கணக்கான யாத்ரீகர்களும் அந்நிய நாட்டுச் சுற்றுலாவினர்களும் இங்கு வருகிறார்கள். இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணம் இவ்வூர் இந்திரகிரியின் உச்சியிலிருக்கும் கோமடேசர் என்று வழங்கப்படும் பாகுபலி பகவானின் மாபெரும் சிலையே! 58 அடி உயரமுள்ள பேரழகுவாய்ந்த இச்சிலைக்கு ஈடு இணை வேறு எங்கும் கிடையாது!

ஐந்தன் புலத்தை வென்று, யானென தென்னுஞ் செருக்கருத்து, மெய்யுணர்ந்து, வானோர்க்குயர்ந்து உலகம் புகுந்து பகவானின் நீங்காக் காட்சியை நம் கண்முன் கொணரும் ஆற்றல் படைத்த திருவுருவமல்லவா! அது இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகியவற்றை வளர்த்துத் தன்னுடலும் உடைமையும் தேவையற்றதென்றெண்ணி அவற்றின் பற்று நீக்கித் தூரதிருஷ்டியுடன் நோக்கும் பகவானின் இந்தத் திருவுருவத் தோற்றம் கண்டு நம் மன மெய்கள் புளகாங்கித மடைகின்றன.


ஸ்ரவண பெளிகுளம் என்ற இப்புனித ஜைனத் திருப்பதி, மைசூர் நாட்டின் ஹாசன் ஜில்லாவைச் சேர்ந்த சென்னராயப் பட்டினம் தாலூக்காவின் தென் கிழக்கில் 8 மைல் தூரத்தில் இருக்கிறது.

ஒன்றைவிட ஒன்று உயர்ந்துள்ள இரு மலைகளுக்கு மத்தியில் உள்ள பெரும் வெளியிடத்தில் கல்யாணி என்ற குளத்தின் கரையில் இந்த ஊர் அமைந்திருக்கிறது.

இவ்வூருக்குப் பெங்களூர், மைசூர், ஹாசன், அரிசிக்கரை முதலிய ஊர்களிலிருந்து பஸ் போக்குவரத்துக்கள் இருக்கின்றன. இது பெங்களூருக்கு 99 மைல் தூரத்திலும் மைசூருக்கு 62 மைல் தூரத்திலும் ஹாசனுக்கு 31 மைல் தூரத்திலும் அரிசிக் கரைக்கு 42 மைல் தூரத்திலும் இருக்கிறது.

இவ்வூரின் புராதனக் கோயில்களும் உயரமும் அழகும் வாய்ந்த சிறப்பியற்றித் தன் கடைசிக் காலத்தை இங்கேயே கழித்ததாகக் கல்வெட்டுச் செய்திகள் மெய்ப்பிக்கின்றன.

மலைமேலே, கோயிலுக்குள்ளே திறந்த வெளியில் பாகுபலி பகவான் என்ற இந்தக் கோமடேசர் சிலை இருக்கிறது. வடக்கு முகம் நோக்கி நிற்கிறது இந்தச் சிலை. உலகத்திலுள்ள அதிசயங்களில் இந்தச் சிலையும் ஒன்று. சுருண்டு அடர்ந்த கேசவளையங்களும், புன்



பகவான் இருக்கும் மலையும் கல்யாணி குளமும்

பகவான் சிலைகளும் குகைகளும் கல்வெட்டுச் செய்திகளும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவைகளாகும். இவ்வூரில்தான் சுருதகேவலிபத்ரபாகு முனிகள் 'வடக்கிருத்தல்' எனப்படும் சல்லேகனை விரதம் மேற்கொண்டார். அவர் சீடரும் மௌரியச் சக்ரவர்த்தியுமான சந்திரகுப்தர் துறவுபூண்டு குருக்களின் ஜீவியபரியந்தம் அவருக்குத்தொண்டுபுரிந்து, பின் அவரின் பாதச் சின்னங்களுக்குச் சிரிப்புத் தவழும் அருள்நோக்கும் தவ ஒளி வீசும் படர்ந்த முகமும், அகன்ற மார்பும், மலைபோலத் திரண்டு ஓங்கி உயர்ந்த தோள்களும், சிறுத்த இடையும், ஒளி வீசும் நகங்களும், அழகிய துடைகளும், முன்னங்கால்களும், தாமரை மலர் மேலுறையும் தாமரைப் பாதங்களும், மெய்ம் மறந்து செய்த தவத்தினூடு வளர்ந்த புற்றுக்களும், துடைகளின் மேலும் கைகளின் மேலும்

சுற்றிக்கொண்டுள்ள கொடிகளும் என்னென்ன அழகு!

வருணிக்க முடியாத தியாகம், தயை, தவம், சாந்தம, மனித கோடிகளை வாழ்த்தும் கம்பீரத் தோற்றம் யாவருள்ளங்களையும் கொள்ளை கொள்கின்றனவே! துன்பத்திலே உழலும் மக்களுக்கு ஆறுதலளிக்கும் இன்பக்காட்சி அல்லவா அது!

கோமடேசர் சிலை, பாரதத்தின் அபூர்வச் செல்வம். ஆயிரம் ஆண்டுகளாக வெயில், மழை, காற்று பனி ஆகிய இவைகளுக்கு இலக்காகியும்கூட இன்று செதுக்கப்பட்ட புதுச் சிலை மாதிரியே இந்தச் சிலை காணப்படுகிறது!

இதை அளித்த சிற்பியின் பெருமை அளவிடற்கரியது!

இச்சிலையின் முழு உயரம் 58 அடி! புஜங்களின் குறுக்கு அகலம் 25 அடி 7½ அங்குலம! இடுப்பின் அகலம் 10 அடி! நடுவிரல் நீளம் 5 அடி!

கோமடேசர் சிலைக்கு இரு மருங்கிலும் இரண்டு சாமரை வீசுபவர்களின் அழகான உருவங்கள் இருக்கின்றன. சிலையின் இரு பக்கங்களின் கீழ் பழைய கன்னட எழுத்தால், 'ஸ்ரீசாமுண்டராயன் செய்வித்தான், கற்றூலயம் கங்கராசன் செய்வித்தான்' என்று எழுதப்பட்டிருக்கின்றன. ○

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

சித்த கலாநிதி
**திரு. வி. பலராமையா**
அவர்கள்

சித்தர்கள் என்பவர்கள் ஒரு தனிப்பட்ட சமயத்தினரோ, குலத்தவரோ அல்லர். மனிதத் தன்மை வாய்ந்த மனிதர்களே சித்தர்களாயினர். ஆண்டவன் கருணை வடிவாயுள்ளவன். அவனைப்போல் மனிதனும் கருணை வடிவாதல் வேண்டும்

இதற்கு அடிப்படையாக வுள்ளது சீவ காருண்ய ஒழுக்கம். அதாவது தன னுயிரைப்போல் மன்னுயிர்களைப் பாவித்தல். எல்லா உயிர்களிலும் சிவன் ஒன்றே. பூமி சக்தியாகவும், ஆகாயம் சிவமாகவும், சக்தி உடலாகவும், சிவம் உயிராகவும், தீபம் அறிவாகவும் உள்ள பராபரம், எங்கும் எல்லாச் சீவ ராசிகளிடத்தும் ஒருவித பேதமுமின்றி வியாபித்துள்ளதென்பது யாவரும் அறிந்ததே. அப்படியிருக்க ஓர் எறும்பைக் கொல்பவனுக்கும், மனிதனைக் கொல்பவனுக்கும் பாபத்தில் பேதமில்லை யென்றே சொல்லவேண்டும்.

மனிதனுக்கு ஆறறிவு உண்டென்றும், மற்றச் சீவராசிகளுக்கு ஆறுவது அறிவு கிடையாதென்றும் சொல்வதைச் சித்தர்கள் ஒப்புக் கொள்வதில்லை. மனிதனுக்கு மற்றச் சீவராசிகளினிடத்திலுள்ள அறிவைப் புரிந்து கொள்ளக்கூடிய அறிவு இல்லை யென்றே அவர்கள் கருதுகின்றனர்.

உதாரணமாக, பட்சிகள் மனிதன் கற்றுக் கொடுக்கும் வார்த்தைகள் எந்த பாஷையிலாயினும் சரி, அதைக் கற்றுத் திருப்பிச் சொல்லும் ஆற்றலுள்ளனவாயுள்ளன. மனிதன் கற்றுக் கொடுக்கும் வித்தைகளைப் பட்சிகளும், மிருகங்களும் திறம்படக் கற்று அவ்வித்தைகளைத் திருப்பிச் செய்து காட்டும் வல்லமையுடையனவாயுள்ளன. நாய், மாடு, ஆடு முதலியன எல்லாவற்றிற்கும் தமக்குள் வசனிக்கும் மொழிகளும் உள்ளன. அவைகளின் பாஷைகளை மனிதன் புரிந்து கொள்ளாதது மனிதனுடைய குற்றம். எறும்பு மற்றொரு எறும்புடன் பேசுகிறது. இந்தப் பக்கம் போகாதே, நீ பின் பக்கம் திரும்பிப் போ என்று சொல்லு

கிறதோ வென்னவோ, ஒன்றோடொன்று வாயொடு வாய் வைத்துச் சில வினாடிகள் நிற்கின்றன. எதிரே வந்த எறும்பு பின் பக்கம் திரும்பிப் போகிறது இராணுவத்தினர் கோடிட்டு நடந்து போவது போல் ஒன்றன் பின் ஒன்றாய் வரிசையாய் நடந்து போகின்றன. அவைகளிடத்திலிருக்கும் ஒழுக்கம் நம்மிடத்தில்லை. ஒரு நாய் நம்முடைய பாஷையைச் சில நாட்களில் புரிந்துகொண்டு நாமிடும் உத்தரவுப்படி நடக்கின்றது. ஆனால் ஒரு மிருகத்தினுடைய பாஷையையோ, ஒரு பறவையினுடைய பாஷையையோ நம்மால் ஆயிரம் வருடங்களாயினும் கற்றுக்கொள்ள முடியுமா? ஆகையால் மனிதர்களுக்கு மாத்திரந்தான் அறிவு உள்ளது, மற்றச் சீவராசிகளுக்குக் கிடையாதென்று புறக்கணித்து இகழ்வது முறையில்லை என்று சித்தர்கள் சொல்லுகின்றார்கள். ஆண்டவனை மிருக ரூபமாகவும், பட்சிகள் ரூபமாகவும் கூட நாம் வணங்குகிறோம். ஏன்? மரத்தையும் கல்லையும்கூட வணங்குகிறோம். அப்படியிருக்க உயிருள்ள சீவன்களிடத்தில் நாம் இரக்கம் காட்டவில்லையேல் நாம் மனித வர்க்கத்தைச்சார்ந்தவர்களாவோமா?

இரக்கம் என்னுமிடத்துப் புலால் மறுத்தல், கொல்லாமை யென்பன குறிப்பாக நம் முன் வந்து நிற்கின்றன. மனிதனுடைய வயிற்றை மற்றப் பல சீவராசிகளைச் சுடும் சுடுகாடாக்கலாமா? சண்டாளன் ஒருவனைத் தெய்விகமுள்ள ஒரு சாதகன் தொடுவதினாலேயே அவனிடமுள்ள தெய்வசக்திகள் மறைந்து விடுகின்றன என்று பெரியோர்கள் சொல்லுகின்றனர். அப்படி இருக்க, ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய சீவராசிகளின் மாமிசங்களையும், எலும்புகளையும் கடித்து ருசிக்கும் மனிதர்கள் மனிதத் தன்மை வாய்ந்தவர்களென்று எப்படிச் சொல்லுவது?

பிணங்களைப் புதைக்குமிடங்களில் பேய், பிசாசு, பூதங்கள் குடியிருக்கின்றன என்பது மரபு. அப்படியிருக்க, பிணங்களின் அணுக்களை நம் உடலில் கொண்டு சேர்த்து நாமே உயிருள்ள பிணங்களாக நடமாடுவது முறையா?

மனிதன் மனிதனைக் கொன்றால் கொலைக் குற்றம். கொலைக்குக் கொலை; அதாவது தூக்குத் தண்டனை. அக்குற்றத்தை விசாரிக்க நீதிபதிகள், கொலை செய்தவன் நிரபராதியென்று வாதாடப் பெரிய பெரிய வழக்கறிஞர்கள், கொலை செய்த ஊரில் கொலை செய்யப்பட்ட நேரத்தில் கொலை செய்தவன் இல்லவேயில்லை யென்பதற்குக் குவியல் குவியலாய்ப் பொய்ச் சாட்சிகள்!

ஆனால் நிரபராதியாய் ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாமலும், எங்கள் கடன் பணி செய்து கிடப்பதே என்று காலம் கழிக்கும் குற்றமற்ற சீவராசிகளை நாள் ஒன்றுக்குஇலட்சக்கணக்கில் கொலை செய்து, பேயைப் போல் தின்னவும் செய்து, பேயைப் போல் திரியும் ஒரு சடத்தை மனிதனென்று கூறுவது பொருந்துமா? இந்தக் குற்றத்தை விசாரிக்க ஒரு நீதி மன்றம் கிடையாதா?

ஆயினும் மனிதன் என்பவன் செய்யும் அட்டூழியம் வீண் போவதில்லை. கொலையுண்ட சீவன் கொலையாளியைத் தொடர்ந்துகொண்டேதானிருக்கிறது. எந்தெந்தச் சீவனுக்கு மனம் வாக்குக் காயத்தால் குற்றத்தை விளைவித்தானோ அவைகளெல்லாம் ஒருங்கே சேர்ந்து

குற்றவாளியைக் கொலை செய்தே முடிக்கின்றன. அதாவது மரணத்தை உண்டு பண்ணுகின்றன. ஆனால் மனிதன் அது வினைப்பயனென்று சொல்லி ஆறுதல் செய்து கொள்ளுகிறான். ஆறறிவு படைத்த மனிதன் செய்யக் கூடிய குற்றங்களை நாம் என்னென்று சொல்லுவது!

அந்தக் குற்றங்கள் எப்படி மனிதனைத் தொடருகின்றன? அவைகள் பேயாக, நிழல் ரூபமாக அவனைத் தொடர்ந்து போகின்றன. வேண்டாம், என்னோடு வராதே என்று சொன்னால் அது கேட்குமா? இந்த மனித உடலுக்கும் பூத உடலென்றல்லவா பெயர்! இந்தப் பூத நிழலை என்று விரட்டியடிக்கிறானோ அன்றுதான் மனிதன் மனிதனாகிறான். நிழலற்ற மனிதனே சாகா நிலையடைகிறான். இராமலிங்க வள்ளலுக்கு நிழல் கிடையாதென்பது அறிந்தவர்களின் மொழி.

எத்தனை எத்தனை கோயில்கள் சுற்றியென்ன பயன்? எத்தனை எத்தனை மந்திரங்கள் செபித்தென்ன பயன்? எத்தனை எத்தனை தீர்த்தங்களில் மூழ்கி என்ன பயன்? இரக்கமில்லாதவன் என்றும் பூதகணமாய்த் திரிந்து நரகமென்ற துக்கத்திலேயே உழன்று செல்லுவான். புலால் உண்பவனுக்கும் கொலை செய்பவனுக்கும் பாபகிருத்தியத்தில் வித்தியாசம் கிடையாது. சீவன்களை வெட்டி விற்பவன், தன்னுடையதொழில் விருத்திக்குச் செய்கிறான். அவன் செய்யும் கொலைக்குக் காரணகர்த்தாவாயுள்ளவன் புலாலை உண்ணுபவனே யாவான்!

பஞ்சாட்சரப் பதிபசுபாச விளக்கத்தில் கண்டுள்ள சில செய்யுட்கள் இங்குக் குறிப்பிடத் தக்கன.

'கங்கையிற் படிந்திட்டாலுங்
கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடி தானம்
வள்ளலாய் வழங்கினாலுஞ்
சங்கையில்லாத ஞான
சாத்திர முணர்ந்திட்டாலும்
போங்குறும் புலால் புசிப்போன்
போய் நரகடைவனன்றே!

'கலையெலா முணர்ந்தானேனுஞ்
சரிசறத் தெளிந்தானேனும்
மலையென வுயர்ந்தானேனும்
மனமடல் அகனறுனேனும்
உலகெல்லாம் புகழப் பல்லோர்க்
குதவிய கையனேனும்
இலகிய இரக்கம் இனறேல்
எழுநரகடைவ னன்றே

'இத்திறனருள் கைப்பற்றி
உயிர்க்கெலாம் இதத்தைச்
செய்க
சத்தியம் இரக்கம் இன்றேல்
முத்தியைச் சார்கிலார், சற்
பத்தியால் யோகஞ்சாரும்;
யோகத்தாற் பரம ஞானம்
சித்தியாம்; இதற்காதாரஞ்
சீவகாருண்யம் அன்றே'

இச் செய்யுட்களுக்கு விளக்கம் தேவையில்லை. இவற்றால் ஞானமென்ற உயர்நிலையடைய வேண்டின் சீவகாருண்யமே ஆதாரமென்பது தெள்ளெனப் புலனாகின்றது அன்றோ!

நம் நேர்ப் பாட்டனார் வாழ்ந்த காலத்தில் நம்முடனிருந்து வாழ்ந்த வள்ளலார் என்ற கடைசிச் சித்தர் கொலையை வெகுவாகக் கண்டித்துள்ளனர். புலாலுண்ணும் மனிதரைக் கண்டு பயந்து நடுங்கினாராம்! ஏன்! அவர்கள் மனித ரூபத்திலிருப்பினும், அவர்கள் பேய் ரூபமாய்த் தோற்றமளித்திருக்க வேண்டும்! அவர் என்னசொல்லுகிறார் பாருங்கள்:

# பொங்கல் விசேஷ விற்பனை!



வன்புலா லுண்ணும் மனி
தரைக் கண்டு
மயங்கி உள் நடுங்கி ஆற்றாமல்
என்பெலாங்கருக இளைத்த
னன்; அந்த
இளைப் பையும் ஐயநீ அறிவாய்'
என்கிறார்.

'துண்ணெனக் கொடியோர்
பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம்
பயந்தேன்;
கண்ணினாலையோ பிறவுயிர்
பதைக்கக்
கண்ட காலத்திலும்
பயந்தேன்;
மண்ணினில் வலையுந் தூண்
டிலும் கண்ணி
வகைகளுங் கண்ட போதெல்
லாம்
எண்ணி யென்னுள்ளம் நடுங்
கிய நடுக்கம்
எந்தை நின்திருவருள் அறியும்'

'கொல்லா நெறியே குருவருள் நெறி' என்றார். கொலை புரிபவன், ஆண்டவன் குலத்துக்குப் புறம்பானவனல்லவா? அதுமாத்திரந்தானா! இறந்தவர்களைச் சுடுவதும் கூட அவரால் சகிக்க முடியவில்லை. தவம் செய்து பெற்று உயிர் போல் வளர்த்து அம் மக்கள் இறந்தால் அப் பெற்றோர்களே அம் மக்களைச் சுடுகின்றார்களே! என்னே அவர்கள் கடின மனம் என்கிறார் வள்ளலார்! அவர்கள் பேயினும் பேய் என்று கூடக் கண்டித்திருக்கிறார்.

'பிறந்தவரை நீராட்டிப் பெருக
வளர்த்திடுகின்றீர் பேயரேநீர்
இறந்தவரைச் சுடுகின்றீர்; எவ்
வண்ணஞ்சம்
மதித்தீரோ? இரவிற்றூங்கி
மறந்தவரைத் தீமூட்ட வல்லீ
ரால்
நும்மனத்தைவயிரமான
சிறந்த வரை யெனப் புகழச்
செய்து
கொண்டீர் ஏன் பிறந்து திரி
கின்றீரே'
என்கிறார்.

அதோடு நின்றாரில்லை வள்ளலார். இறந்தவரைச் சுடுவது கொலை யென்கிறார்.

'குணம்புதைக்க உயிரடக்கங்
கொண்டதுசுட்டால்
அதுதான் கொலையாமென்றே
வணம்புதைக்க வேண்டுமென
வாய்தடிக்கச்
சொல்லுகின்றேன்'

பார்த்தீர்களா? சீவகாருண்யம் எந்த அளவிற்கு வள்ளலாரிடத்தில் வளர்ந்திருந்தது! பூதவுடல் மறைந்து சூக்கும உடலாகி, நிழலற்ற நிலையை அவரடைந்ததற்குக் காரணம் மற்றும் விளக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே சித்தி அடைவதற்கு ஆதாரம் சீவகாருண்ய ஒழுககமாகும்.




யோகானந்தேசுவர மடத் தலைவரான ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதி சுவாமிகளை நேரில் ஒரு முறை பார்த்தவர்கள், அவர்களின் அருள் முகம் காண அடிக்கடி அவரைப் போய்த் தரிசனம் செய்கிறார்கள்!

# ஸ்ரீ
# சங்கரானந்த
# சரஸ்வதி

ஸ்ரீசைலத்தில் திருமண உற்சவம் முடிவடைந்ததும் ஒவ்வொருவராக ஸ்ரீ காமகோடிப் பெரியவர்களிடம் விடை பெற்றுச் சென்றனர். அவர்களில் ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதி சுவாமிகளும் ஒருவர். காலையில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு, ஸ்ரீ ஆசாரிய மூர்த்திகளுக்கு ஆராதனை செய்த ஐவரில் ஒருவரான இந்த இளம் சந்நியாசி, மைசூர் யோகானந்தேசுவர மடத்தின் தலைவர். 'மக்களின் சேவையே கடவுளின் சேவை' என்பதில் மிக உறுதியாக இருப்பவர்.

இவர் துறவுக் கோலம் பூண்டதே ஓர் அதிசயமான கதை! மைசூர் அரண்மனைப் புரோகிதரின் மகனாகப் பிறந்த இவருக்குப் படிப்பே வரவில்லை. அண்ணனும், தம்பியும் கவனமாகப் படித்து, நல்ல மார்க்குகள் வாங்கினார்கள் இவரோ 'பெயி'லாகிக் கொண்டே வந்தார். அதற்காகத் தந்தை சடிந்துகொண்டு, 'நீ சமையல் வேலைக்குத்தான் லாயக்கு' என்று கேவலமாகப் பேசினார்! மனம் உடைந்த இளைஞன், ஒருநாள் வீட்டை விட்டு வெளியேறினான்.

சில மாதங்கள் ஓட்டலில்வேலை



உடலுக்கு வைத்தியம் செய்யும் ஸ்ரீசங்கரானந்த சரஸ்வதி சுவாமிகளும், உள்ளத்திற்கு வைத்தியம் செய்யும் பெருநிதி கிருபானந்தவாரியார் சுவாமிகளும்



ஸ்ரீ சங்கரானந்த சுவாமிகளும் தேவகோட்டை நகரத்தார் பெருங்குடி மக்களும். திரு சுப்பிரமணியன், திரு. சேர்மன், திரு. சந்திரமௌளி, திரு. சீனி, திரு. மீனாட்சிசுந்தரம், திரு. நாராயணன் ஆகியோர்.

செய்து பிழைத்தான். பின்னர் நாடகக் கம்பெனியில் சேர்ந்து நடித்தான். அங்கும் ஏமாற்றம், ஏளனம், அவமானம், கம்பெனி முதலாளியிடம் சொல்லிக் கொள்ளாமல் ஓர் இரவு கிளம்பி விட்டான்! எங்கே போவது?

கால் போன வழி சென்று கொண்டிருந்தான். வெயில் தாங்க முடியவில்லை. வயிற்றில் பசியின் இரைச்சல். ஒரு நதியைப் பார்த்தான். களைப்புத் தீர நீராடலாம் என்ற ஆசை பிறந்தது. உடைகளைக் களைந்து, கரையில் வைத்து விட்டு, நதியில் வேகமாகக் குதித்தான்.

ஆசை தீர நீச்சல் அடித்து விட்டுக் கரை யேறியவனுக்கு மீண்டும் ஏமாற்றம். கழற்றி வைத்த வேட்டியையும், சட்டையையும் காணவில்லை. அவை காற்றில் எங்கோ அடித்துக் கொண்டு போய்விட்டன!

இந்த உலகத்தில் அவனுக்கு மிஞ்சியது இடுப்பில் கட்டியிருந்த ஈரத்துண்டு ஒன்றுதான். அத்துடன் அறுபது மைல் நடந்து, சிருங்ககிரிக்கு வந்து சேர்ந்தான். அவனுக்கு அப்போது வயது இருபத்தி யொன்று.

சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி அவர்களை அவன்

நேரில் பார்த்ததில்லை. எனவே, ஊன் இன்றி, உறக்கமின்றி மகானின் தரிசனத்திற்காகத் தவம் இருந்தான் இளைஞன்.

ஒரு நாள் விடியற்காலை இரண்டரை மணியிருக்கும். யாரோ தன்னைத் தொட்டு எழுப்புவது போல் பிரமையுடன் துள்ளியெழுந்தவன், எதிரில் தவப் பெருநிதி நிற்பதைக் கண்டு, மெய்சிலிர்க்க, சாஷ்டாங்கமாசக் கீழே விழுந்து, அவரது சமல பாதங்களைக் கண்ணீரால் நனைத்தான்.

சுவாமிகள் அவனை எழுந்திருக்கச் சொன்னார்கள். ''குழந்தாய்! கண்களைத் துடைத்துக் கொண்டு, நதியில் நீராடி விட்டு வா'' என்று அன்பொழுகக் கூறினார்.

சுவாமிகள் பணித்தபடியே இளைஞன் நீராடி விட்டு அவரிடம் வந்தான். அவர் தம் கையால் விபூதி கொடுத்தார். ஏதோ மந்திரங்களை உபதேசித்தார். ''உனக்கு இனி ஒரு குறையுமில்லை. உன் துன்பங்கள் எல்லாம் இன்றோடு தொலைந்துவிட்டன. நீ புது வாழ்வு வாழ்வாய்'' என்று ஆசி கூறினார்கள்.

சிறிது காலம் சிருங்கேரி மடத்திலேயே இருந்துவிட்டு, பின்னர் சிக்மகளூர் ஜில்லாவில் தத்தாத்ரேய பீடம் அமைந்துள்ள பாபுடன்கிரி காட்டுப் பிரதேசத்தில் இரண்டு வருடங்கள் தங்கி, அனுஷ்டானங்களிலும் தியான தவயோகங்களிலும் ஈடுபட்டான். ஆன்ம ஒளி பளிச்சிட்டது. கலைவாணியின் கடாட்சம் கிட்டியது!

பின்னர், சிறிது காலம் சிவானந்த ஆசிரமத்தில் தங்கிவிட்டு, மீண்டும் மைசூருக்கே திரும்பி, கிருஷ்ணராஜ நகரிலுள்ள யோகானந்தேசுவர மடத்தை அடைந்து, வேதசாஸ்திரங்களைக் கற்பதில் தீவிரக் கவனம் செலுத்தினார் இந்த இளைஞர். அதன் பலனாக நூதன ஆராய்ச்சிகளில் இவர் கவனம் சென்றது.

ஸ்ரீ யோகானந்தேசுவர மடம், ஸ்ரீ ஆதி சங்கரரின் பரம்பரையில் வந்துள்ள பல மடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஸ்ரீ வித்தியாரண்யருடைய தொடர்பு இம்மடத்திற்கு இருந்து வருவதாகவும், சுமார் எழுநூறு ஆண்டுகளாக இது இயங்கி வருவதாகவும் கூறப்படுகிறது

இந்த மடம் தோன்றிய வரலாறு இதுதான்: மைசூர் மாநிலத்தில், ஹாஸன் மாவட்டத்தில், ராமபிரும்மானந்த சரஸ்வதி என்ற திருநாமம் கொண்ட மகான் நிஷ்டையிலிருந்தபோது பூமிக்கடியில் சாலிக்கிராமம் ஒன்று இருப்பதாகக் கனவாயிற்று. அதை எடுத்து அவர் ஆராதித்து வந்தார். அந்த ஸ்ரீராம சாலிக்கிராமம் இன்றும் அங்கே இருந்து வருகிறது. அதையடுத்து மற்றொரு கனவும் தோன்றியது. அதன்படி அந்த மகான் அங்கே ஸ்ரீ ராமருக்குக் கோயில் ஒன்றும் எழுப்பினார். அக்கோயிலிலுள்ள உற்சவமூர்த்தி நான்கு புஜங்களுடன் கூடிய சதுர்புஜ ஸ்ரீ பட்டாபிராமன். அங்கு ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் புனர்வசு தினத்தன்று ரதோற்சவம் நடைபெற்று வருகிறது. அங்கே நீலகண்டேசுவர ஆலயம் ஒன்றும் இருக்கிறது.

அவ்வரிசையில் வந்த யோகானந்தர் என்பவர்தான் காவிரிக் கரையில், கிருஷ்ணராஜ நகரில், யோகானந்தேசுவர ஸ்ரீமடத்தை அமைத்தார். அந்த மடத்தின் பதின்மூன்றாவது பட்டத்து

சுவாமிகள் வாசுதேவானந்த தீர்த்தர் அவர்கள். அன்னாருக்கு எண்பத்தியேழு வயதாகிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன் அவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவருக்கு ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு சந்திர சேகர பாரதி சுவாமிகளின் அருளைப் பெற்றுள்ள இளைஞரே ஆயுர்வேத முறையில் சிகிச்சை யளித்தார். அதன் பிறகு அவரையே தமக்கு அடுத்த பட்டமாக ஸ்ரீ வாசுதேவானந்த தீர்த்தர் தேர்ந்தெடுத்தார். 3-2-63 ல் யோகானந்தேசுவர மடத்தின் பதினைன்காவது தலைவரான சுவாமி சங்கரானந்தசரஸ்வதிக்குத்தற்போது முப்பத்தைந்து வயதாகிறது.

மடத்தின் அதிபதியானதிலிருந்தே காஞ்சி சுவாமிகளைத் தரிசிக்கவேண்டும் என்ற அவா இவருள் குடிகொண்டது. அதற்கு முக்கிய காரணம், தவ ஒளி மிளிரும் அருள் நோக்கிலும் புன்னகை மலரும் முகத் தோற்றத்திலும், கை அசைத்து ஆசிகூறும பாவத்திலும், ஸ்ரீ காமகோடி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதியைப் பெருமளவு ஒத்து இருந்ததுதான்!

மூன்றாண்டுகளாக முயன்றவருக்கு, ஜீவன்முக்தரான ரமண பகவான் வாழ்ந்த திருவண்ணாமலையில் ஸ்ரீ காஞ்சிசுவாமிகளைச் சந்திக்கும் பெரும் பேறு கிட்டியது. அன்றிரவு, சுவாமிகளுடன் மூன்று மணி நேரம் தனிமையில் உரையாடியதைத் தமது வாழ்விலேயே மறக்க முடியாத பெரும் நிகழ்ச்சியாகக் கருதுகிறார் ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதி.

அன்றுதான் இவர் தமது சமூகப் பணித்திட்டத்தைக் காஞ்சிப் பெரியவரிடம் விளக்கினார்.

பெரு வியாதியால் பீடிக்கப்பட்டு, சமூகத்தினரால் ஒதுக்கப்பட்டு, உடல் வாடி, மனம் நொந்து வாழும் சகோதர சகோதரிகளுக்கு உதவி புரியும் பொருட்டு, மைசூரில் ஒரு மருத்துவ மனை திறக்க வேண்டும் என்ற இவரது திட்டத்தைச் சுவாமிகள் முழு மனத்துடன் வரவேற்றார்கள். இந்தப் பணி, விரிவடைவதோடு, சிறந்து ஓங்கும் என்றும் ஆசி அருளினார்கள்.

''காஞ்சி சுவாமிகளின் கருணையே கருணை. நான் மைசூருக்குப் போய்ச் சேருவதற்குள், அங்கே என் பெயரில் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு 'செக்' காத்துக் கொண்டிருந்தது! இது தான் என் பணிக்குக் கிடைத்த முதல் தொகை. ஸ்ரீ பெரியவர்களிடமிருந்து ஆசியும் பணமும் கிடைத்தவுடன் என் ஆர்வம் பன்மடங்காகப் பெருகிவிட்டது. எனக்குத் தேவையான பதினைந்து இலட்ச ரூபாய் சீக்கிரமே சேர்ந்து விடும என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது'' என்கிறார் ஸ்ரீ சங்கரானந்த சுவாமிகள்.

விவேகானந்தரின் சொற்பொழிவுகளில் காணும் மதப் பற்றும் ஆர்வமும் தன்னம்பிக்கையும் இவருடைய பேச்சுகளில் தொனிக்கின்றன.

பெங்களூரிலிருந்து அர்ஸிகரைக்குச் செல்லும் பாதையில் டிப்டூருக்குப் பன்னிரண்டாவது மைலில மிகக் குறைந்த விலையில் நாற்பத்தியொரு ஏகர் நிலம் வாங்கி யிருப்பதாகவும், அங்குக் கிணறுகள் எடுக்க மைசூர் சர்க்கார் எண்ணாயிரம் ரூபாய் பணம் அளித்திருப்பதாகவும், பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூலிப்பதற்காகத் தாம் ஓயாமல் சுற்றிக்கொண்டிருப்பதாக

திருச்சிற்றம்பலம்

உன்னைமறந் திடுவேனோ
மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியேன்
உன்ஆணை இதுநீ
என்னைமறந் திடுவாயோ
மறந்திடுவா யெனில்நான்
என்னசெய்வேன் எங்குறுவேன்
எவர்க்குரைப்பேன் எந்தாய்
அன்னையினுந் தயவுடையாய்
நீமறந்தாய் எனினும்
அகிலமெலாம் அளித்திடும்நின்
அருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே
இருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்சோதி
எனக்குவிரைந் தருளே.

வும் கூறினர் இந்த இளம் துறவி.

செல்வந்தராகட்டும், ஏழைகள் ஆகட்டும், பண்டிதராகட்டும் பாமரராகட்டும், சம்சாரியாகட்டும், துறவியாகட்டும், ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களை ஒருமுறை தரிசித்து விட்டால் தாங்கள் ஆன்ம பலன் பெறுவதோடு ஏதாவது ஒருவழியில் சமூகத்திற்குப் பயன் படுபவராகவும் ஆகிவிடுகிறார்கள் தரிசன பாக்கியத்தால் கிடைக்கும் சக்தியைக் கொண்டு சாதிக்க முடியாததை யெல்லாம் சாதித்து விடுகிறார்கள். ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் தவ வலிமை அப்படியோர் அற்புதத்தை நிகழ்த்தி விடுகின்றது!

ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதி சுவாமி மட்டும் அதற்கு விலக்காக முடியுமா? மத சேவையில் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் காட்டும் வழியைப் பின்பற்றச் சித்தமாக இருப்பதாகக் கூறுகிறார் அவர். ஜகத்குரு எது கூறினாலும் அது உலக நலனுக்காகத்தான் இருக்கும் என்று திடமாக நம்பும் இவர், நம் மனத்திலுள்ளதை அறிந்து, கருணை வழங்கும் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் தெய்விக சக்தியைத் தாம் உணர்ந்த அனுபவம் ஒன்றையும் கூறினர்.


ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதி சுவாமி ஸ்ரீ சைலத்திற்கு வந்த போது, தம் பையில் பணம் எடுத்துக் கொண்டு வருவதற்குப் பதில், மறதியாக 'செக்' புஸ்தகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு வந்து விட்டாராம். அவருடன் வந்திருந்த ஒரு பக்தர் இந்த விஷயத்தைச் சுவாமிகளிடம் சொல்லாமல் தம் கையிலிருந்த பணத்தைச் செலவழித்து வந்தார். ஆனல், திரும்பிப் போவதற்கு அவரிடம் பணம் இல்லை. எல்லாம் செலவழிந்து விட்டது. ஊருக்குப் புறப்படுவதற்குத் தயாரானபோது அவர் கையிலிருந்த பணமெல்லாம் தீர்ந்துவிட்ட செய்தியை மெள்ள ஸ்ரீ சங்கரானந்தரிடம் சொன்னர். ''ஓகோ, அப்படியா? அதனலென்ன? காமகோடி மடத்திலே கேட்டு வாங்கிக் கொண்டால் போகிறது'' என்று கூறினர் சுவாமிகள். ஆனல், மானேஜரிடம் சென்று எப்படிப் பணம் கேட்பது என்று அந்த பக்தர் தயங்கிக்கொண்டிருந்தார்!

அப்போது, ஸ்ரீ மடத்துச் சிப்பந்தி ஒருவர் அந்த பக்தரிடம் வந்து ''சுவாமிகளும் நீங்களும் மைசூரிலிருந்து வந்ததற்கும், திரும்பிப் போவதற்குமான செலவுத் தொகையைக் கொடுக்கும்படி பெரியவர் சொல்லியிருக்கிறார்களாம். மானேஜர் தங்களிடம் இச் செய்தியைச் சொல்லி விட்டு வரச் சொன்னர்'' என்று கூறிவிட்டுப் போனர்.

இதைக் கேட்டதும் அந்த பக்தர், ''இவர் சாதாரண சுவாமிகள் இல்லை! குறையறிந்து கொடுக்கும் வள்ளல்! மனம் அறிந்து அருளும் தெய்வம்!'' என்று கூறி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்! —பரணீதரன்,

ஆனந்த விகடனிலிருந்து. நன்றி.

# திரு அருட்பாவில் சொல் ஓவியங்கள்



ஊரன் அடிகள்

திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் தாம் அருளிச் செய்த திருவருட்பாவுள் சில சொற் சித்திரங்களை நமக்குக் காட்டுகிறார். அவற்றுள் இரண்டினை இங்குக் காண்போம்.

பகுதி தகுதி விகுதி எனும்
பாட்டில்
இகலில் இடையை இரட்டித்
—தகவின்
அருச்சித்தால் முன்னும் அது
கடையாம் கண்டீர்
திருச்சிற் சபையானைத்
தேர்ந்து.

இது ஒரு வெண்பா. இதனுள் சொல்லழகும் பொருளழகும் பொதிந்து கிடக்கிறது பகுதி, தகுதி, விகுதி என்னும் சொற்களின் இடையெழுத்தை இரட்டித்துத் திருச்சிற் சபையானைத் தகவுடன் அருச்சித்தால் அச்சொற்களின் கடையெழுத்துக்கள் சேர்ந்த முதலெழுத்துக்களின் தொகுதி கிடைக்கும் என்பது இதன் பொருள். இப்படி நோக்கின் விளங்காது. சற்றே விளங்கக் காண்போம்.

பகுதி

தகுதி

விகுதி

மூன்றும் மூன்று சொற்கள். மூன்று சொற்களும் மும்மூன்று எழுத்துக்களால் ஆனவை. மூன்று சொல்லிலும் இடையெழுத்து — நடுவெழுத்து—'கு' என்பதே. சொல்லுக்கு ஒவ்வொன்றாக மூன்று சொல்லிலும் மூன்று 'கு' உள்ளன. மூன்று 'கு'வை இரட்டித்தால் $3 \times 2 = 6$ கு-அறுகு ஆகும். அறுகு என்பது அறுகபுல், அறுகம்புல்லைக் கொண்டு திருச்சிற் சபையானை அருச்சிக்க வேண்டும். அருச்சனையின் பயன் அம்மூன்று சொற்களின் முதலெழுத்துக்களுள் அடங்கி இருக்கிறது. பகுதியின் முதலெழுத்து 'ப'. தகுதியின் முதலெழுத்து 'த'. விகுதியின் முதலெழுத்து 'வி'. மூன்றின் முதலெழுத்தும் சேர்ந்தால் ப, த, வி,-பதவி என்று ஆகும். அறுகினால் அருச்சித்தால் பதவி கிடைக்கும். என்ன பதவி கிடைக்கும்? இதற்கு விடை

கடையெழுத்துக்களில் அடங்கிக் கிடக்கிறது. மூன்று சொற்களுக்கும் கடைசி எழுத்து 'தி' என்பதே. மூன்று 'தி' சேர்ந்தால் முத்தி. ஆதலின் முத்திப் பதவி கிடைக்கும்.

பகுதி, தகுதி, விகுதி என்ற மூன்று சொற்களில் முதலெழுத்துக்களைக் கூட்டினால் பதவி, கடையெழுத்துக்களைக் கூட்டினால் முத்தி, இடையெழுத்துக்களை இரட்டித்தால் அறுகு என்று அமைவதே இதிலுள்ள நயம். திருச்சிற் சபையானை அறுகினால் அன்போடு அருச்சித்தால் முத்திப் பதவி கிடைக்கும் என்பது கருத்து. இப்போது இன்னொரு முறை பாடலைப் படியுங்கள். பொருள் விளங்கும்.

அடுத்து இன்னொரு வெண்பாவுக்குப் போவோம்.

தாதாதா தாதாதா தாக்
குறைக்கென் செய்குதும்யாந்
தாதாதா என்றுலகில் தான்
அலைந்தோம்—போதாதா
நந்தா மணியே நமச்சிவா
யப்பொருளே
எந்தாய் எனப்புகழ வே.

இப்பாடலுள் 'தா' என்ற எழுத்து பலமுறை வருகிறது. 'தா' என்பது ஓர் எழுத்து. அதுவே ஒரு சொல்லும் ஆகும். சொல்லாக ஆகும்போது கொடு என்று பொருள்படும். தமிழில் ஓர் எழுத்தே சொல்லாக நின்று பொருள் தருவதை ஓரெழுத்தொரு மொழி என்பர். எடுத்துக் காட்டாகச் சில வருமாறு:

ஈ—ஓர் எழுத்து—கொடு, தா, என்று பொருள்படும் ஒரு சொல் —ஈயின் பெயர்.

பா—ஓர் எழுத்து—பாட்டு என்றுபொருள்படும் ஒரு சொல்.

ஆ—ஓர் எழுத்து—பசுவின் பெயர்.

இனி 'தா' பலகாற்பயின்று

வரும் மேற்பாடலுக்குச் செல்வோம். 'தாதாதா தாதாதாதாதாக் குறைக்கு என் செய்குதும் யாம்' என்பது பாட்டின் முதல் அடி. இதில் வரும் 'தா' எழுத்துக்களை எண்ணிப் பாருங்கள். ஏழு 'தா' இருக்கும். ஏழு 'தா'வையும் சேர்த்தால் எழுதா என்றாகும். இப்போது முதல் அடியைப் படியுங்கள். எழுதாக்குறைக்கு என் செய்குதும் யாம் எமது தலைமீது ஆண்டவன் எழுதாத குறைக்கு என்ன செய்வோம்— என்பது பொருள். பாடலின் இரண்டாம் அடி 'தாதாதா என்றுலகில் தான் அலைந்தோம்— போதாதா' என்பது. இதன் முதலில் மூன்று 'தா' வருகிறது. முதல் இரண்டு 'தா'வும் ஒரு சொல். தாதா என்னும் அச்சொல் வள்ளல் எனப் பொருள்படும். மூன்றாவது 'தா' ஒரு தனிச்சொல். ஓரெழுத்தொரு மொழி. கொடு என்று பொருள் படுவது. தாதா, தா என்பது வள்ளலே கொடு என்று பொருள் பட்டு நிற்கும் நயம் மிக்க அழகிது. இரண்டாம் அடியின் கடைசியிலுள்ள தனிச் சொல்லாகிய போதாதா என்பதிலும் இரண்டு 'தா'க்கள் வந்துள்ள அருமை என்னென்பது! பாடலின் பின் இரண்டு அடிகளும் இறைவனைப் போற்றுவதாகும் அவற்றிற்குப் பொருள் விரித்தல் ஈண்டு தேவையன்று. பாட்டை இன்னொரு முறை படியுங்கள் பொருள் விளங்கும்.

தாதாக்களே தாருங்கள் என்று கேட்டுக்கேட்டு உலகில் அலைந்து திரிந்தோம், திரிந்ததுபோதாதா? எம் தலைமீது எழுதாக்குறைக்கு என் செய்வோம்.

அரியபெரிய கருத்துக்களை இப்படி சொற்சித்திரங்களாக அருளுகின்றார் இராமலிங்கர். திருவருட்பாவுள் திளைத்தால் இவைபோல் இன்னும் பல காணலாம்.

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே. ●

**ஏற்கெனவே சிவன் கோவிலாக இருந்ததைத்தான், ஷாஜஹான், தாஜ் மஹாலாக மாற்றிவிட்டான்என்று ஆராய்ச்சியாளரான பி. என். ஓக் சான்றுகளுடன் சொல்லுகிறார். நவமணியில் வந்த செய்தி இது.**

உலக அதிசயங்களில் ஒன்றெனக் கருதப்படும் தாஜ் மகால் முன்பு சிவன் கோவிலாக இருந்தது. இதற்கு வரலாற்று ஆதாரம் இருக்கிறது என்கிறார் இந்திய வரலாற்று சீரமைப்புக் கழகத் தலைவரான பி. என். ஓக்!

லக்னோ மியூசியத்தில் உள்ள கல் வெட்டு ஒன்றில் இதற்கு ஆதாரம் இருக்கிறது எனகிறார் அவர்.

கி. பி. 1165-ல் கட்டப்பட்டது தாஜ்மகால். தனது அன்பு மனைவி மும்தாஜ் பேகத்தை இழந்த மன்னர் ஷாஜஹான், அவளது நினைவாக, அவளது சமாதிமீது இந்த இறவா நினைவுச் சின்னத்தை, பளிங்குக் கற்களாலேயே உருவாக்கினான் என்று வரலாறு கூறுகிறது.

இந்தத் தாஜ்மகால் முன்பு சந்திர மவுலீசுவரர் ஆலயமாக இருந்தது என்பதற்கு லக்னோ கல் வெட்டில் உள்ள ஆதாரம் தவிர, ஷாஜஹான் எழுதி வைத்துள்ள குறிப்புகளிலும் ஆதாரம் இருக்கிறது. தாஜ்மகாலைக் கட்டுவதற்காக, அங்கு இருந்த இந்து கோவிலை கைப்பற்றியதாக ஷாஜஹானே எழுதி வைத்திருக்கிறான்!

லக்னோ கல்வெட்டில் 2 கட்டடங்கள்பற்றிக் குறிப்பிடபட்டுள்ளது, அவைகளில் ஒன்றுபளிங்குக் கட்டடம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தாஜ்மகாலாகத்தான் இருக்க வேண்டும்.

இது பரமார்த்திதேவ் என்ற மன்னனால் கி. பி. 1155-ல் கட்டப்பட்ட சிவன் கோவில் என்று கருதப்படுகிறது. பின்னர் மன்னர்களின் மாளிகையாக இது மாறியது. 1630-ல் இந்த அரண்மனை தாஜ்மகாலாக மாற்றப்பட்டது அப்போது ஜெய்ப்பூர் மன்னராக இருந்த ஜெய்சிங்கிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

தாஜ்மகாலை மான்சிங்கின் மாளிகை (ஏனென்றால் அதில் குடியிருந்தவர்களில் பிரபலமான கடைசி மன்னன்,மான்சிங்தான்) என்று ஷாஜஹானே தனது 'பாதுஷா நாமா' என்ற குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறான். பளிங்கு மாளிகை என்று இதை 'பாதுஷா நாமா' குறிக்கிறது. லக்னோ கல் வெட்டிலும்

# சிவன் கோவிலே தாஜ் மஹாலாக மாற்றப் பட்டது!

பளிங்குக் கோவில் பற்றிக் குறிப்பிட்டு இங்குக் குடியிருக்கும் சந்திர மவுலீசுவரர், மீண்டும் தனது உறைவிடமான இமயமலை அடிவாரத்துக்குத் திரும்பிச் செல்வதில்லை என்று முடிவு செய்யும் அளவுக்கு அழகாக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாஜ்மகாலில் காணப்படும் பல சின்னங்கள், அது இந்து மன்னரால் கட்டப்பட்டது என்பதை நிரூபிக்கிறது. இதில் ஷாஜஹானால் மூடப்பட்ட இரு அறைகளைத் திறந்து பார்த்தால், இது பற்றிய பல உண்மைகள் வெளியாகும்!

தாஜமகால் என்பதற்குப் பாரசீகமொழியில் அர்த்தம் ஏதும் இல்லை. சமாதிஒன்றுஇருக்கிறது. தேஜ் மகா ஆலயம் என்ற சமஸ்கிருத பெயரின் திரிபாகவே இது இருக்க வேண்டும்.

இக் கட்டடத்தின் உச்சியில் சந்திரப்பிறை உருவம் உள்ளது. சிவனின் நெற்றியில் உள்ள பிறைச் சந்திர உருவமே இது!

தாஜ்மகாலைச் சுற்றியுள்ள தோட்டத்திலும் சிவபூஜைக்குத் தேவையான பூக்கள், செடிகளே உள்ளன!

மேலும் ஷாஜஹான் அவனுடைய மனைவி அர்ஜிமந்தபானு பேகம் ஆகியோரின் சமாதிகள் உள்ள அறையில் இந்து கோவில்களில் உள்ள பிரகாரங்கள் போன்ற அமைப்பு உள்ளது. அதன் நடுவில்தான் சந்திர மவுலீசுவரர் உருவம் இருந்திருக்க வேண்டும்.

அந்த இடத்தில் மேல் கூண்டின் நடுவில் இருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக வடிகிறது என்று சொல்கிறார்கள். இதுவும் சிவன் கோவில் இருந்ததன் அடையாளமே.

ஆகவே, தாஜ்மகால் யமுனைக் கரையில் சந்திராத்தேய வம்சத்தைச் சேர்ந்த பரமார்த்தி தேவ் என்ற மன்னனால் கட்டப்பட்ட சிவன்கோவில்தான் என்று அந்த நிபுணர் கருதுகிறார். ○

# வினைகளை வெல்லுவது எப்படி?

நாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு **நல்வினைகள்** என்று பெயர். தீய காரியங்களுக்குத் **தீவினைகள்** என்று பெயர்.

நல்வினைகளால் நமக்கு இன்பம் ஏற்படுகிறது. தீவினைகளால் நமக்குத் துன்பம் ஏற்படுகிறது.

நாம் இன்பங்களை அடைவதற்குஆசைப்படுகிறோம், துன்பங்களை அடையாமல் தப்புவதற்கு முயற்சிகள் செய்கிறோம்.

ஆனால்,

நமக்கு இன்பங்களில் ஆசை இருக்கும் வரையில், துன்பங்களும் நம்மைத் தொடர்ந்தே வரும். நாம் துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமானால், இன்பங்களை அடைவதற்கு ஆசைப்படக் கூடாது.

இன்பங்களை விரும்பாமலும், துன்பங்களை வெறுக்காமலும், இரண்டையும் சமமாகக் கருதி, இரண்டில் எதுவந்தாலும் அதை அமைதியோடு ஏற்றுக்கொள்வது தான், விடுதலைபெற்ற சீவன் முக்தனின் நிலை.

அந்த நிலையை எய்தும்போது, வினைகள் வெல்லப்பட்டன என்று சொல்லப்படுகிறது.

வினைகளில் மூன்று வகை உண்டு. **சஞ்சிதம்**, பிராரப்தம், **ஆகாமியம்** என்பன அவற்றின் பெயர்கள்.

**சஞ்சிதம்** என்பது, நாம் பல் கோடிப் பிறவிகளில் செய்துள்ள நல்வினை தீவினைகளின் மொத்தத் தொகுதி. அந்த வினைப்பயன்களை அனுபவிப்பதற்கு, நாம் இன்னும் பலகோடிப் பிறவிகள் எடுக்கவேண்டும். அப்போது கூட, அவற்றை நம்மால் முழுவதும் அனுபவித்துத் தீர்த்துவிட முடியாது.

ஏனென்றால்,

பழைய வினைகளை அனுபவித்துத் தீர்ப்பதற்காகவே, நாம் புதிய பிறவிகளை எடுக்கிறோம். அப்படி எடுத்த ஒவ்வொரு பிறவியிலும், பல புதிய வினைகளைச் செய்கிறோம். இந்தப் புதிய வினைகள் பழைய சஞ்சிதவினைகளோடு போய்ச் சேர்ந்துகொள்கின்றன.

இவ்வாறாக,

பிறவிதோறும் நமது சஞ்சித வினைத் தொகுதி பெருகிக் கொண்டு போகிறதே தவிர, குறைந்து கொண்டு வருவதில்லை!

சஞ்சித வினைகள் எண்ணற்றவை. ஆனால், அவை எல்லாம் ஒரே வேளையில் பலன் கொடுப்பதில்லை. ஒரு மாந்தோப்பில் ஏராளமான மரங்கள் இருந்தாலும், அவற்றுள் சில மரங்கள் மட்டும்தானே முதலில் பழுக்கின்றன? அதேபோல், நமது சஞ்சிதவினைகள் கோடானுகோடியாய் இருந்த போதிலும் அவற்றுள் சில வினைகள்தாம் முதலில் பக்குவப்பட்டுப் பலன் கொடுக்கத் தொடங்குகின்றன. அவ்வாறு பக்குவப்பட்டு உள்ள வினைகளின் தொகுதிக்குத்தான் **பிராரப்தம்** என்று பெயர்.

பிராரப்தம் தான் நமக்குப் பிறவியைத் தருவது. அதாவது, எந்த எந்த வினைகள் நமக்குப் பலன் கொடுக்கத் தயாராக இருக்கின்றனவோ, அந்த வினைகள் தரும் பலன்களை அனுபவிப்பதற்காகவே நாம் பிறவி எடுக்கிறோம். அவற்றை அனுபவித்து முடியும்வரையில், ஆயிரம் அணு குண்டுகளாலும் நம்மை அழித்துவிட முடியாது. அவற்

றை அனுபவித்து முடிந்தவுடன், அப்புறம் அரைக்கணம்கூட நாம் இந்த உலகத்தில் இருக்க முடியாது!

பிராரப்த வினைகளின் பயன்களை நாம் அனுபவிக்க அனுபவிக்க, அந்த வினைகள் ஒழிந்து விடுகின்றன. ஆனால் அவற்றை அனுபவிக்கும்போதே நாம் புதிய வினைகளில் ஈடுபடுகிறோம். அந்தப் புதிய வினைகளுக்குத்தாம் ஆகாமியம் என்று பெயர்.

ஒவ்வொரு பிறவியிலும் எண்ணற்ற ஆகாமிய வினைகளை நாம் ஈட்டி விடுகிறோம். இந்த ஆகாமிய வினைகள், பழைய சஞ்சித மூட்டையை மேலும் மேலும் பெருக்கிக்கொண்டே போகின்றன!

ஆகவே,

பிறவிதோறும் நமது வினைச் சுமைகள் கூடுகின்றனவே தவிரக் குறைவது இல்லை. அதனால்தான், வினைகளை அனுபவித்து ஒழிக்க முடியாது என்று தத்துவ நூல்கள் கூறுகின்றன!

அப்படியானால், அவற்றை எப்படித்தான் ஒழிப்பது?

ஞானத்தினால்தான் வினைகளை ஒழிக்க முடியும் என்பது ஒரு கொள்கை.

இறைவனிடத்தில் பக்தியோடு செய்யப்படுகிற பரிபூரண சரணுகதிதான் வினைகளை வேரறுக்கும் என்பது வேறொரு கொள்கை.

பயன் கருதாது செய்யப்படுகிற நிஷ்காமிய கர்மப் பயிற்சியின் மூலமே வினைகளை ஒழிக்க இயலும் என்பது இன்னொரு கொள்கை.

இம் மூன்று கொள்கைகளும் சரியானவையே. ஆனால், இவற்றை எல்லாம் காட்டிலும் எளிதான வழி இன்னொன்று இருக்கிறது.

அதாவது,

பிராரப்த வினைகளின் பயனாக, இந்தப் பிறவியில் நாம் எத்தனையோ இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் அல்லவா?

இன்பங்களை அனுபவிக்கும்போது, நம் உள்ளமானது துள்ளிக் குதிக்கிறது.

துன்பங்களை அனுபவிக்கும்போது, நம் உள்ளமானது சோர்ந்து தவிக்கிறது.

இப்படித் துள்ளியும் குதிக்காமல், சோர்ந்தும் தவிக்காமல், எதுவந்தாலும் மனத்தை ஒரே மாதிரியான அமைதி நிலையில் வைத்திருக்க நாம் பழக வேண்டும்.

இன்ப துன்பங்களை அனுபவிக்கும்போதுகூட, உண்மையில் நாம் அவ்வளவாகப் பாதிக்கப்படுவது இல்லை. இன்பம் வரப்போகிறது என்று எதிர்பார்க்கும்போதும், துன்பம் வரப்போகிறது என்று எதிர்பார்க்கும் போதும்தான் நம் உள்ளம் பெரும் கொந்தளிப்புக்களை அடைகிறது.

அதேபோல,

ஓர் இன்பத்தையோ துன்பத்தையோ அனுபவித்து முடிந்த பிறகும், அதை எண்ணி நம் உள்ளம் கிளர்ச்சி அடைகிறது.

இந்தக் கொந்தளிப்புக்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் நம் உள்ளத்தில் இடம் கொடுக்கக் கூடாது.

அதாவது,

வரப்போகும் இன்ப துன்பங்களைப் பற்றியோ, வந்துபோய் விட்ட இன்ப துன்பங்களைப் பற்றியோ நாம் சிறிதும் எண்ணிப் பார்க்கவே கூடாது. அவற்றை நாம் அறவே மறந்து விட வேண்டும்.

இவ்வாறு,

நம் சிந்தனையானது எதிர் காலத்தை நோக்கியோ இறந்த

காலத்தை நோக்கியோ ஓடாமல் எப்போதும் நிகழ்காலத்திலேயே நிலைத்து நிற்குமானால், நம்மால் அனுபவிக்கப்படுகிற இன்பமும் துன்பமும் நமக்கு ஒன்று போலவே தெரியும். அதாவது, இரண்டினாலும் நாம் சிறிதும் பாதிக்கப்பட மாட்டோம்.

இந்த உயரிய நிலைக்குத்தான் இருவினையொப்பு என்று பெயர்.

இது தான் வினைகளை வெல்லுவ தற்குரிய மிகமிக எளிதான வழி!




வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை,
4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17
அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன்,
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5பாண்டிபஸார்.
தியாகராயநகர், சென்னை-17

# அருள்

மாத இதழ்

விலை 30 காசு

ஆசிரியர்:
திருமதி
தமிழ்வாணன்







தென்னாட்டில் சிறந்
தெய்விகப்பத்திரிகை

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந் துன்னைப்போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே
கொள்ளேன் புரந்தான்மால் அயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நிணைதடியா ரோடல்லால்
நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிற தெய்வம் உன்னை
யல்லாது எங்கள் உத்தமனே

# அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது

## இந்த இதழில்




அருள்-2 பிப்ரவரி

கருணை-5 15-2-68

மாசி, பிலவங்க விலை. 30 காசு

உண்மையான சுகம்
மனம் அடங்கிவிட்ட
இடத்திலே பிறக்கிறது!



அன்பர்களே!

சுகத்தை எல்லாரும் விரும்புகிறார்கள். துக்கத்தை வெறுக்கிறார்கள். ஆனால் உலகிலே யாராவது சுகமாக இருக்கிறார்களா? அரசன்முதல் ஆண்டி வரை எல்லாரும் துக்கமயமாகத் தான் இருக்கிறார்கள். வாழ்விலே சுகம் என்பது அணுவளவும் இல்லை. மனைவி, மக்கள், நிலம், வீடு, செல்வம், பதவி இவைகளை ஈட்டுவதிலேயே வறிதே வாழ் நாளைக் கழித்து மாய்கின்றார்கள். மனைவி, மக்கள், செல்வம் இவைகளால் சுகத்தை நாடுவது, கல்லைக் கட்டிக்கொண்டு நீந்துவதற்குப் பழகுவதையொக்கும். ''தாலி கட்டையிலே தொடுத்து நடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலைதானே'' ''மதலையைப் பெறுநாள் துன்பம், வளர்த்திடு நாளும் துன்பம்'' செல்வத்தை ஆக்கும் போதும் துன்பம், அதனைக் காக்கும்போதும் துன்பம், அதனைச் செலவிடும்போதும் துன்பம்! சிலர் மாட மாளிகை, வாகனம், ஆடை அணிகலன்களோடு இருப்பார்கள். தொலையில் இருந்து பார்த்தால் சுகமாக இருப்பது போல் காட்சியளிப்பர், நெருங்கிப் பார்த்தால் துக்கமயமாக இருப்பர். மலையைத் தொலைவிலிருந்து பார்த்தால் மழுமழுப்பாகவும் மரகதக் குவியல் போலும் காணப்படும். நெருங்கிப் பார்த்தால் கல்லும், கரடும், முள்ளும், முரடுமாக இருக்கும்.

# சுகம்

திரு முருக கிருபானந்தவாரியார்

ஆகவே துக்கத்தைப் போக்கிச் சுகத்தைப் பெறவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? சுகம் எங்கே இருக்கின்றது என்பதைப் பற்றிச் சிந்திப்பது அறிஞர் கடன்.

அன்பர்களே!

மனம் அடங்கிய இடத்திலே தான் உண்மையான சுகம் ஊற்றெடுத்து ஓடுகின்றது.

நம்முடைய மனம் ஒரு கணத்திற்குப் பலப் பல நினைவுகளை நினைந்து அங்கும் இங்குமாக அலைகின்றது. காடுங் கரையும் மனக் குரங்கு கால்விட்டு ஓடுகின்றது. ''சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும் மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே'' என்கின்றார் தாயுமானார்.

மனம் அடங்குவது மிகக் கடினம். அதிலே உழைத்தவர்க்குத் தான் அதன் அருமை தெரியும். ''சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது'' நெடுங்காலம், ஜெபம், தியானம் முதலிய அரிய சாதனைகளால் மனதை அடக்க வேண்டும். ''தடுங்கோள் மனத்தை... அருள்தானே உமக்கு வெளிப்படும்'' என்ற சுந்தரலங்காரத் திருவாக்கை இங்கு உன்னுக.

பூஜையில் அமர்ந்தாலும் சில சமயம் மனக் குரங்கு தாவிக் குதித்து எங்காவது ஓடும். அதன் தலையில் குட்டி, மந்திரமாகிய சங்கிலியால் பிணைத்து உறுதியாகிய தூணிலே கட்டிப் போட வேண்டும். பிறகு அதுவே நன் மனமாகி நமக்கு இனிமையைச் செய்யும்.

'சும்மாயிருக்கச் சுகஞ்சுக
மென்று கருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ்
சொல்லவும் கேட்டும்
அறிவின்றியே
பெம்மான் மவுனி
மொழியையுந் தப்பி
என்பேதைமையால்
வெம்மாயக்காட்டில்
அலைந்தேன் அந்தோ
என் விதிவசமே'

என்கின்றார் தாயுமானார்.

சும்மா இருந்து சுகம் பெற்றவர் அருணகிரிநாதர். அச்சுகம் என்று வருமோ என்று ஏங்கி ஏங்கி இறையருளாற் பெற்றார் இராமலிங்கர்.

இன்று வருமோ நாளைக்கே
வருமோ அல்லதுமற்
றென்று வருமோ அறியேன்
எங்கோவே—துன்றுமல
வெம்மாயை யற்று வெளிக்குள்
வெளிகடந்து
சும்மா யிருக்கும் சுகம்.

நாம் வெய்யிலிலே, மழையிலே, காட்டிலே, மேட்டிலே அலைகின்றபோது துக்கப் படுகின்றோம். வீட்டிலே வந்து அலைச்சலின்றி அமைதியாயிருக்கின்ற போது சுகப்படுகின்றோம். அது போல் கண்டவாறு மனம் அலைகின்ற போது துக்கமே வரும். அவ்வாறு அலைகின்ற மனதை ஒரு புறம் நிறுத்தி வைத்தால் சுகமுண்டாகும்.

அழகிய ஒரு தெய்வ இளநல வடிவத்தை இதயத்தில் நிறுவி உதடு அசையாமல் மனத்திலே அம் மூர்த்திக்குரிய திருமந்திரத்தை வைத்து அம்மனம் அதனை நினைக்குமாறு செய்தால் மனம் சிறிது சிறிதாக அடங்கி வரும்.

திருவள்ளுவர் ஒரு சமயம் தமது மாணவர் ஏலேலசிங்கரைக் காண அவருடைய மாளிகைக்குச் சென்றிருந்தார் ஏலேலசிங்கர் பெருந் தனவந்தர். வள்ளுவர் வந்த சமயம் அவர் வெள்ளி, தங்கப் பாத்திரங்கள் வைத்து சிவ பூஜை செய்து கொண்டிருந்தார். திருவள்ளுவர் மாளிகைக்கு வெளியில் இருந்தபடியே அவர் வழிபாடு செய்கிறார் என்று காவலர் மூலம் அறிந்து வழிபாட்டிற்கு இடையில் குறுக்கிட வேண்டாம் என்று கருதி வெளித் திண்ணையில் அமர்ந்திருந்தார். ஏலேலசிங்கர் நெடுநேரம் வழிபாடு புரிந்து முடிந்தபின் வெளியே வந்தார். தமது குருநாதரைக் கண்டு திடுக்கிட்டு விட்டார். ''சுவாமி! என்ன இப்படித் தாங்கள் திண்ணையில் அமர்ந்திருக்கலாமா? உள்ளே வந்திருக்கக் கூடாதா? எப்போது வந்தீர்கள்? உள்ளே வாரும்'' என்று வினவினார்.

திருவள்ளுவர், ''ஒன்றும் விசேடமில்லை; சும்மா உன்னைக் காண வந்தேன். நீ பூஜையிலிருந்தபடியால் இங்ஙனமே அமர்ந்திருந்தேன்'' என்றார்.

''சுவாமி! நான் மூன்று மணி நேரம் பூஜை செய்தேனே! தாங்கள் வந்து எவ்வளவு நேரம் ஆகியிருக்கும்?'' என்று ஏலேலசிங்கர், தாம் அதிக நேரம் பூஜை செய்ததைக் குறிப்பிட்டார்,

திருவள்ளுவர், ''அப்பா! நீ திருவல்லிக்கேணியிலே நூல் கொடுத்த பாக்கி இன்னும் வரவில்லையே, வட்டி நஷ்டமாகின்றதே! என்று எண்ணினாயே! அந்தச் சமயத்தில் நான் வந்தேன்!'' என்றார்!

ஏலேலசிங்கர் மனமடங்காத வழிபாடை எண்ணி நாணினார்! ஆகவே மனத்தை யடக்கிச் சுகம் பெறவேண்டும்! ●

துன்பம் வந்தபொழுதும்
துளியும் குறைந்திடாத
அன்புதான் தலைசிறந்தது

# அன்புக் கொருவர்

இராதா, சம்பத்

துன்புற்ற நேரத்திலும் அன்பு செலுத்துவதில் அணுவளவும் குறையாத செயல் வீரம் மிக்கவர் சிலரே இருக்கக்கூடும்.

பிறர் துன்பமுற்றபோது, உடன் உதவுவது 'இடுக்கண் களையும் நட்பு' என்று 'உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே' என்ற உபமானத்துடன் நாயனார் சிறப்பிக்கிறார். இது நட்பு.

மனித மன இயல்படி அவன் செய்யும் எந்தக் காரியமும் அவன் பெற்றிருக்கும் மன அமைதியின்படியே, அதை எதிரொலித்தே இருந்து வருகிறது. கோபம் கொண்ட மனிதன் கொலைத் தொழில் செய்யும் அவலம் வரை போகக் காண்கிறோம்.

மனத்தளவே நடக்கும் குணம் பெற்றவன் மனிதன் மட்டுமல்ல, தாமும் தாம் என்கின்றனர் மனிதனினும் மேம்பட்ட தேவகணத்தார். நெற்றிக் கண்ணையே திறந்து எரித்த அரன்கூட எரிக்கப்பட்ட தன் மேல் கோபம் கொண்டுதான் எரித்திருக்கிறார்; பொய்யுரையாது புகழ்பெற்ற அரிச்சந்திரனிடம் கோபம் கொண்டதினாலேயேதான் விசுவாமித்திரனும் பெருஞ்சோதனைகள் பலவற்றைச் செய்தான்.

ஆனால் மனிதராகப் பிறந்த ஒருவர் சீர்கெட்ட மனநிலையில் கூடத் தன் இயற்கையான அன்பு செலுத்தும் பண்பிலிருந்து மாறாதிருந்திருக்கிறார் என்றால் அவரைச் சேக்கிழார்பிரான், 'செப்பெருஞ்சீர் அப்பூதி' என்று சிறப்பிப்பதில் தவறேது?

கோப்பெருஞ் சோழனைக் காணாமலே அவன் மேல் அன்பு பூண்ட புலவர் பிசிராந்தையைப் போல் முதுபெரும் அடியார் அப்பர்பிரான் மேல் அவரைக் காணாமலே அன்பு பூண்டவர் அப்பூதியடிகள். அவர் பெயரில் குடிநீர்க்குளம், தரு, தண்ணீர்ப் பந்தல், சாலை அனைத்தும் செய்து தனக்கு வரவேண்டிய புகழைத் தியாகம் செய்தவர் சேக்கிழார் கூறும் அந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார்!

வீடு தேடி வந்த அப்பரை இறைஞ்சி அமுதுண்ண வேண்டினார் அப்பூதி. அதன் பொருட்டு அப்பர் பெருநாமஞ் சாத்திய பிள்ளைதனை அழைத்து வாழைக் குருத்து இலை அரிந்து வர ஆணையிட, அவனும் அதைப் பேற

னக் கருதி அரியும்போது ஒரு நாகம் தீண்டி விட்டது. தீய விடம் தலைக்கொள்ள இலையைத் தாயிடம் தந்து இறந்து விடுகிறான் மகன். அது கண்டும் அப்பூதியடிகள் இருந்த நிலைமை தான் அவரைச் சிறப்பித்து மற்றோரிடமிருந்து பிரிக்கக் காரணமாகிறது.

''தீயவிடந் தலைக்கொள்ளத்
தெருமந்து செழுங்குருத்தைத்
தாயர் கரத்தினில் நீட்டித்
தளர்ந்து தனைத் தழல் நாகம்
மேயபடி உரை செய்யான் விழக்
கண்டு ''கெட்டொழிந்தோம்
தூயவர்இங் கமுதுசெயத்
தொடங்கார்' என் றதுஒளித்தார்

இறந்த மகனை மறைத்து அப்பருக்கு உணவிடத் துணிந்த அப்பூதியின் அன்புக்கு ஈடான அன்பு எங்குளது?

அப்பர்பிரான் உண்மை உணர்ந்து, அப்பூதியின் அன்பை வியந்து. இறையருள் துணைகொண்டு இளைஞனை உயிரூட்டி எழுப்பினார். ஆனால் அப்பூதி அது கண்டு மகிழவில்லையாம். ''அருந்தனயன் உயிர் பெற்ற அது கண்டும், அப்பர் அமுது செய்யக் காலம் தாழ்கிறதே என்று வருந்தினாராம்.

'கெட்டொழிந்தோம்' என்ற பனநிலையிலும் கெடாத அன்பு செலுத்திய அப்பூதி அடிகளை அன்புக்கோர் அப்பூதி எனலாம் அல்லவா?

○


பிளாசா & குளோப்
அக்ஸ்தியா 70 MM
மேகலா
ஸ்ரீநிவாஸா
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்
நடிக்கும்
பத்மினி
பிக்சர்ஸ்
ரகசிய போலீஸ் 115
ஈஸ்ட்மென் கலர்
தயாரிப்பு & டைரக்ஷன்
பி. ஆர். பந்துலு
செந்தில் ரிலீஸ்
SENTHIL-

சூரியனிடத்திலிருந்து எண்ணற்ற ஒளிக் கதிர்கள் தோன்றி, உலகனைத்தும் பரவிச் செல்லுவது போல, இறைவனிடத்திலிருந்து எண்ணற்ற மந்திரங்கள் தோன்றி அண்ட பிண்ட சராசரங்கள் யாவற்றினும் வியாபித்து நின்று எல்லா உயிர்களையும் எல்லாப் பொருள்களையும் தமது சக்தியால் இயக்கிக் கொண்டிருக்கின்றன!

# மந்திரங்களை ஜெபிப்பது எப்படி?

மந்திரங்கள் ஒலி வடிவம் ஆனவை.

ஆனால்,

அந்த ஒலியானது கடலின் ஓசையைப் போலவோ, குயிலின் கூவலைப் போலவோ, ஒரு பொருள் அற்ற வெற்றொலி அல்ல, அது பொருள் உள்ள எழுத்தொலி.

உயிரை உடல் சுமப்பதுபோல, மந்திரத்தின் பொருளை அந்த எழுத்தொலியானது சுமந்து நிற்கிறது.

அந்தப் பொருள் எது?

அதுதான் இறைவன்!

இறைவன் எண்ணிறந்த ஆற்றல்களை உடையவன். அந்த ஆற்றல்களுக்குக் கல்யாண குணங்கள் என்று பெயர். அக் குணங்களுக்கெல்லாம் உறைவிடம் இறைவனே!

உலகில் உள்ள எல்லா உயிர்கள்இடத்தும், எல்லாப் பொருள்கள் இடத்தும் காணப்படுகிற ஆற்றல்கள் அனைத்தும், உண்மையில் இறைவனுடைய ஆற்றல்களே! பனித்துளிகள், நீர் நிலைகள், பளிங்குக் கற்கள், கண்ணாடித் துண்டுகள் இன்னும் இவை போன்ற கோடானு கோடிப் பொருள்களில் ஒரே சூரியன் பிரதிபலிப்பதுபோல, ஒரேஇறைவனுடைய ஆற்றல் தான் ஒவ்வொரு அணுவிலும் பிரதிபலித்துக் கொண்டிருககிறது!

அந்த ஆற்றலே மந்திரங்களின் எழுத்தொலியிலும் அவற்றின் உட்பொருளாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு மந்திரத்தின் உட்பொருளையே அதன் அதிதேவதை என்று நாம் சொல்லுகிறோம்.

மந்திரத்தின் உட்பொருளுக்கு அர்த்தம் என்று பெயர். அதன் எழுத்தொலிக்குச் சப்தம் என்று பெயா். சப்தமும அர்த்தமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கமுடியாதவை. இரண்டும் ஒரே இடத்திலிருந்து பிறப்பவை. அந்த இடம்தான் இறைவன் அல்லது மகாத்மா!

அதாவது,

சூரியனிடத்திலிருந்து எண்ணற்ற ஒளிக்கதிர்கள் தோன்றி உலகனைத்தும் பரவிச் செல்லுவதுபோல; இறைவனிடத்திலிருந்து எண்ணற்ற மந்திரங்கள் தோன்றி, அண்டபிண்ட சராசரங்கள் யாவற்றிலும் வியாபித்து நின்று, எல்லா உயிர்களை


காளி மார்க்
அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
வாத்திய கோஷ்டித்
தலைவர் விரும்புவதும்
காளி மார்க் பானம்தான்.
ஆயிரக் கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாருத ருசியை
அனுபவிக்கின்றனர்,
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளி மார்க்
பானங்கள் அருந்துங்கள்.
Kali mark
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

யும் எல்லாப் பொருள்களையும் தமது சக்தியால் இயக்கிக்கொண்டிருக்கின்றன. மந்திர ஜெபம் செய்து அதில் சித்திபெற விரும்புவோர், முதலில் இந்த உண்மையை அறிந்துகொள்ள வேண்டும். அதை அடிக்கடி நினைவில் கொள்ளவும் வேண்டும்.

உலகில் உள்ள எல்லாஉயிர்கள் இடத்தும் எல்லாப் பொருள்கள் இடத்தும் விளங்குகிற எல்லா ஆற்றல்களும் இறைவனது ஆற்றல்களே!

இறைவனது அந்த ஆற்றல்கள் மந்திரங்களின் வடிவில் திகழ்கின்றன.

ஆகவே,

அந்த மந்திரங்கள்தாம் உலகு எங்கிலும் உள்ள எல்லா உயிர்களின் ஆற்றல்களாகவும், எல்லாப் பொருள்களின் ஆற்றல்களாகவும் காட்சி அளிக்கின்றன.

இதைக் கருத்தில் கொண்டு தான், ஒவ்வொரு உயிருக்கும் ஒரு மந்திர உடல் உண்டு. ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மந்திர வடிவம் உண்டு என்று ஆகம நூல்கள் பேசுகின்றன.

ஒரு பொருளுக்கு உரிய மந்திர வடிவத்தை அறிந்து அதை ஒருவன் சித்தி செய்து வைத்துக் கொண்டால், அந்தப் பொருள் அவனுக்கு வசப்பட்டுவிடும்.

ஓர் உயிருக்கு உரிய மந்திர வடிவத்தை அறிந்து அதை ஒருவன் சித்தி செய்துவைத்துக் கொண்டால், அந்த உயிரானது அவனுக்கு வசப்பட்டுவிடும்.

ஆனால்,

ஒவ்வொரு தனிப்பட்ட உயிருக்கும் தனிப்பட்ட பொருளுக்கும் உரிய மந்திர வடிவங்கள் அனைத்தையும் அறிந்துகொள்வதும், அவற்றைச் சித்தி செய்து கொள்வதும், மனித அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட காரியங்கள்!

எனினும்,

'உலகில் உள்ள எல்லா உயிர்கள்மீதும், எல்லாப்பொருள்கள் மீதும ஆட்சி செலுத்துகிற சில மகாமந்திரங்கள் இருககின்றன. நமது வேதங்களிலும் ஆகமங்களிலும் அவை விளக்கப்பட்டு உள்ளன. சிவபெருமானுடைய ஐந்தெழுத்து மந்திரம், அம்பிகையினுடைய பதினைந்தெழுத்து மந்திரம், திருமாலுடைய எட்டெழுத்து மந்திரம், கணபதியினுடைய இருபத்தெட்டெழுத்து மந்திரம், முருகனுடைய பத்தெழுத்து மந்திரம் ஆகிய இவையும், இவைபோன்ற வேறு சில மந்திரங்களும் அத்தகைய மகா மந்திரங்கள்!

இந்த மகாமந்திரங்களில் ஏதேனும் ஒன்று ஒருவனுக்குச் சித்தியாகி விடுமானால், அகில உலகங்களும் அவனுக்கு வசப்பட்டு நிற்கும். அவனை ஒரு நடமாடும் கடவுள் என்றே நாம் கருதி விடலாம்!

அப்படிச் சித்திபெற விரும்புபவன், முதலில் சிலகாலம் மந்திரத்தை வாய்விட்டுச் சொல்லிப் பழகி, பிறகு அதை மனத்திற்குள்ளேயே ஜெபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மானசிக ஜெபம் வலுப்பெற வலுப்பெற, மனத்தில் அமைதி நன்கு குடி கொள்ளும்.